வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu




Email : news@eelanadu.lk | மலர் : 03 | 13.05.2022 வெள்ளிக்கிழமை | இதழ் : 158 | பக்கங்கள் : 16

# பிரதமராக பதவியேற்றார் ரணில் விக்கிரமசிங்க!



கொழும்பு, மே 13

நாட்டின் 26ஆவது பிரதமராக ரணில் விக்கிரமசிங்க நேற்று வியாழக்கிழமை மாலை 6.30 மணியளவில் பதவியேற்றார். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்பாக பிரதமராகப் பொறுப்பேற்ற அவர், ஆறாவது தடவையாகப் இந்தப் பொறுப்புக்கு வந்துள்ளார்.

15

## ரணிலுக்குப் பிரதமர் பதவி; ஒருபோதும் ஏற்கமுடியாது!

### மல்கம் ரஞ்சித் கடும் எதிர்ப்பு



கொழும்பு, மே. 13


ரணில் விக்கிரமசிங்கவை பிரதமர் பதவிக்கு நியமிப்பதை ஏற்றுக் கொள்ள முடியாது என பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்தார்.

பிரதமராக ரணில் விக்ரமசிங்கவை நியமிப்ப

15

## நெருக்கடிகளை தீர்ப்பதற்கான முதற்படியே ரணிலின் நியமனம்

### அமெரிக்கா வாழ்த்து



கொழும்பு, மே. 13

புதிய பிரதமராக ரணில் விக்ரமசிங்க நியமிக்கப்பட்டமையானது அனைவரையும் உள்ளடக்கிய அரசாங்கத்தை உருவாக்கி நெருக்கடியை தீர்க்கும் முதல் படி என அமெரிக்கா தெரிவித்துள்ளது.

ருவிட்டர் பதி

15

## பிரதமராக ரணில் நியமனம்; த. தே. கூட்டமைப்பு அதிருப்தி!

கொழும்பு, மே 13

ரணில் விக்கிரமசிங்கவின் பிரதமர் நியமனம் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதிருப்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்ட

15

## 'கோட்டா கோ கம' தொடர வேண்டும்

### ரணில் விக்கிரமசிங்க

கொழும்பு, மே 13

காலிமுகத்திடலில் முன்னெடுக்கப்படும் கோட்டா கோ கம போராட்டம் அப்படியே தொடர வேண்டும் என்று பிரதமர் ரணில் விக்கிரசிங்க தெரிவித்துள்ளார்.

போராட்டத்தில் ஒருபோதும் பொலிஸ் தலையிடாது என்றும் அவர் கூறியுள்ளார்.

இது தவிர அமைச்சரவை அமைச்சர்களின்

15

## மஹிந்த உள்ளிட்ட 17 பேர் வெளிநாடு செல்லத் தடை!

கொழும்பு, மே. 13

முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட 17 பேருக்கு வெளிநாடு செல்லத் தடைவிதித்து கோட்டை நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

கடந்த 9ஆம் திகதி கொழும்பில் காலி முகத்திடலில் மற்றும் அலரி மாளிகை முன்பாக அமைதியான முறையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது தாக்குதல்

15

## புதவியேற்று சில நிமிடங்களில் ரணிலை வாழ்த்தினார் மஹிந்த!

கொழும்பு, மே. 13

புதிய பிரதமராக பதவியேற்றுள்ள ரணில் விக்ரமசிங்கவுக்கு, முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ வாழ்த்து தெரிவித்துள்ளார்.

ருவிட்டர் பதிவொன்றை வெளியிட்டு அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

15

## ஆட்சி பொறுப்பை ஏற்பதற்குத் தயார்!

### ஜனாதிபதிக்கு சஜித் நேற்று நிபந்தனைகளுடன் கடிதம்!

கொழும்பு, மே. 13

நான்கு நிபந்தனைகளின் அடிப்படையில், ஐக்கிய மக்கள் சக்தி தலைமையில், இடைக்கால அரசொன்றை ஸ்தாபிப்பதற்கும், பிரதமர் பதவியை ஏற்பதற்கும் தயார்."

-இவ்வாறு குறிப்பிட்டு, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச வுக்கு நேற்று அவசர கடிதமொன்றை

15

## ராஜபக்ஷக்களின் மீட்பராக இருந்து வருகின்றார் ரணில்

### ஜே.வி.பி. குற்றச்சாட்டு

கொழும்பு, மே. 13

ரணில் விக்கிரமசிங்கே எப்போதும் ராஜபக்ஷ குடும்பத்தின் மீட்பராக இருந்து வருகிறார் எனத் தெரிவித்துள்ள ஜே.வி.பி. தலைவர் அனுரா குமார திசாநாயக்க, ரணிலும் கோட்டாபயவும் இணைந்து முன்வைக்கும் தீர்வை நம் நாட்டில் யாரும் நம்ப மாட்டார்கள் என்று கூறினார்.

ரணில் கோட்டாபயவை நம்புகிறார்.

15

## ஜனாதிபதி மீது அவநம்பிக்கை; 17ஆம் திகதி மன்றில் விவாதம்!

### கட்சி தலைவர்கள் கூட்டத்தில் முடிவு

கொழும்பு, மே 13

ஜனாதிபதிக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை எதிர்வரும் 17ஆம் திகதி பாராளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுக்கப்படும் என்று பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா

15

## சஜித்தின் கோரிக்கையை நிராகரித்தார் ஜனாதிபதி

கொழும்பு, மே. 13

பிரதமர் பதவியை ஏற்றுக்கொள்வதற்கு தயாராக இருப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்திருந்த யோசனை, ஜனாதிபதியால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை என்று ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

சஜித் பிரேமதாஸ, ஜனாதிபதியோடு பேசிய

15

## கோட்டா தலைமையிலான அரசில் எந்த பதவியையும் ஏற்கமாட்டேன்!

### சரத் பொன்சேகா திட்டவட்ட அறிவிப்பு



கொழும்பு, மே. 13

ஜனாதிபதியாக கோட்டாபய ராஜபக்ஷ பதவி வகிக்கும் அரசில், எந்த வொரு பதவியையும் ஏற்கப் போவதில்லை என்று பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா அறிவித்துள்ளார்.

ஜனாதிபதி பதவி விலக வேண்டும் என்பதே நாட்டு மக்களின் கோரிக்கை. அந்த கோரிக்கையுடன் தான் உடன்படுவதாகவும் பொன்சேகா

15

## ஊரடங்கு தளர்வு

கொழும்பு, மே. 13

நாடு முழுவதும் நடைமுறையிலிருக்கும் ஊரடங்கு உத்தரவு இன்று வெள்ளிக்கிழமை காலை 6 மணிக்கு தளர்த்தப்படும் என்று ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு

15

## ரணிலுக்கு சஜித்தின் 25 எம்.பிக்கள் ஆதரவு!

கொழும்பு, மே. 13

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்க ஐக்கிய மக்கள் சக்தியின் 25 பாராளுமன்ற உறுப்பினர்கள் தீர்மானித்து உள்ளதாக அரசியல் தகவல்கள் தெரிவிப்பதாக கொழும்பு ஊடகம் செய்தி வெளியிட்டு உள்ளது.

இதில் ரணில் விக்கிரமசிங்கவை

15

# முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் யாழ். பல்கலையில் கடைப்பிடிப்பு

யாழ்ப்பாணம், மே 13

**முள்ளிவாய்க்கால் இனவழிப்பு வாரத்தின் முதலாம் நாள் நினைவு அஞ்சலி, யாழ். பல்கலைக்கழக முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி வளாகத்தில் நேற்று வியாழக்கிழமை ஆத்மார்த்தமாக மாணவர்களால் முன்னெடுக்கப்பட்டது.**

அகவணக்கத்துடன் ஆரம்பமான நினைவேந்தலைத் தொடர்ந்து பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் ஊழியர் சங்க பிரதிநிதிகளால் மலர் அஞ்சலி செலுத்தப்பட்டதோடு ஈகைச்சுடரும் ஏற்றப்பட்டது.

இதனையடுத்து கருத்து வெளியிட்ட யாழ். பல்கலைக்கழக மாணவர் சமூகம் முள்ளிவாய்க்காலில் இடம்பெற்ற இன அழிப்பின் இறுதி நாட்களை முன்னிட்டு இவ்வாரம் இன அழிப்பு வாரமாக நினை வேந்தல் கள் வடகிழக்கு தமிழர் தாயக மெங்கும் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்த வாரத்தில் ஊரடங்கு சட்டம் அமுலில் இருந்தாலும் முள்ளிவாய்க்கால் கஞ்சி மற்றும் நினைவேந்தலை தமிழர் தாயகம் இதயபூர்வமாக கடைப்பிடிக்கவேண்டும் என பல்கலைக்கழக மாணவ சமூகம் கோரிக்கை விடுத்துள்ளது.



இதன்போது யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ பீட மாணவ ஒன்றிய தலைவர், யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்க தலைவர், யாழ். பல்கலைக்கழகத்தின் அனைத்து பீட மாணவர்கள், யாழ் பல்கலை ஊழியர்கள் என பலரும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ-3)

## இப்படியும் நடக்கிறது...!

ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஒரேயோரு தேசியப்பட்டியல் ஆசனம் கிடைத்த பின்னர், அந்த இடத்திற்கு யாரையுமே நியமிக்காமல் அமைதியாக இருந்தார் ரணில் விக்கிரமசிங்க.

தேர்தல் முடிந்த கையோடு அந்த இடத்திற்கு தன்னை நியமிக்க அவர் விரும்பவில்லை. அது ஒரு நகைப்பிற்கிடமாகிவிடும் என்பது அவரின் நினைப்பாக இருந்திருக்கவேண்டும். ஆனால், அதற்காக அவர் வேறு யாரையும் கட்சியின் சார்பில் ஏன் நியமிக்காமல் இருக்கின்றார் என்று பலரும் அங்கலாய்த்ததும் உண்டு.

அவர் அந்த இடத்திற்கு யாரை நியமித்திருந்தாலும், கட்சியில் இன்னமும் அவரது தலைமையை நம்பிக்கொண்டு அரசியல் செய்கின்ற பலரும் தத்தமக்குள் முட்டி மோதியிருப்பார்கள்.

ஆனால் யாரையும் நியமிக்காமல் ரணில் அமைதி காத்தது, தான் பாராளுமன்றம் போகவேண்டும், தனது தேவை அங்கே நிச்சயம் ஏற்படும், அப்போது கௌரவமாக உள்ளே போவோம் என்ற நம்பிக்கையில்தான்.

அவரது அந்த நம்பிக்கையும் வீண்போகவில்லை. நீண்ட கால காத்திருப்பின் பின் அவர் பாராளுமன்றம் போனபோது, முழு பாராளுமன்றமும் எழுந்துநின்று அவரை வரவேற்ற காட்சி பலருக்கும் இப்போதும் நினைவில் இருக்கலாம்.

அவர் பாராளுமன்றம் வந்தபோதும் இந்த ஊர்க்குருவி அதுகுறித்து ஒரு தனிப்பத்தியையே எழுதியிருந்தது.

நாட்டில் பொருளாதார நெருக்கடி கழுத்தை நெரிக்கத் தொடங்கியபோதே, ரணில் பிரதமராக வேண்டும் என்ற கோரிக்கையும் நாடு முழுவதிலும் இருந்தும் கிளம்பத் தொடங்கியிருந்தது.

மேற்கு நாடுகளை அரவணைத்துச் சென்றால்தான், இன்றைய பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்கலாம் என்ற கருத்து சாமான்னியர்களுக்குக்கூட ஏற்படத் தொடங்கியபோது, அதற்கு பொருத்தமானவர் ரணில்தான் என்பதும் பரவலாக நம்பப்பட்டது.

அதனால்தான், நெருக்கடி தொடங்கிய காலத்திலேயே அவரை அரசாங்கத்திற்குள் உள்வாங்க மஹிந்தர் முயற்சி செய்தார்.

பின்னர், ஜனாதிபதியும் பல தடவைகள் ரணிலை சந்தித்து ஆலோசனை பெற்றதும், அவரை பிரதமராக்க விரும்பியதும் பல தடவைகள் செய்திகளாகியிருந்தன.

அப்போதெல்லாம் தொடர்ச்சியாக மறுத்துவந்த ரணில் அமைதிகாத்தது எதற்காக என்பது இப்போது தெரிந்துவிட்டது.

அன்று ரணில் அரசிற்குள் வந்திருந்தால், யாருடன் சேர்ந்து அவர் பணியாற்ற வேண்டிவந்திருக்கும் என்பது இங்கே எழுதித்தான் வாசகர்கள் தெரிந்துகொள்ளவேண்டும் என்பதல்ல. மக்கள் யார்மீது வெறுப்புக்கொண்டு இன்று வீதியில் நிற்கிறார்களோ அவர்களுடன் சேர்ந்தே ரணில் ஆட்சியமைக்க வேண்டியிருந்திருக்கும். அவ்வாறு செய்யாமல் ரணில் அமைதி காத்ததும், இப்படியொரு நிலைமை வரும் என்ற நம்பிக்கையில்தான் என்பது ரணிலை தெரிந்தவர்களால் புரிந்துகொள்ளக்கூடியதே.

இன்று, ரஜபக்ஷக்கள் இல்லாத அரசு ஒன்றை அமைக்க சந்தர்ப்பம் கிட்டியிருக்கின்றது. அதேவேளை, அவர்கள் அமைதியாக எதிரணியில் இருந்து, தான் செய்கின்ற பணிகளுக்கு இடையூறு செய்யாமல், அதனை ஆதரிப்பதை தவிர வேறு மார்க்கம் இன்றி இருப்பார்கள் என்பதும் ரணிலுக்கு தெரியாததல்ல.

மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதி ஆகியதும் தன்னிடமிருந்த ஐம்பதுக்கும் குறைவான எம்பிக்களுடன் எப்படி ஓர் அரசாங்கத்தை நூறு நாட்கள் நடாத்தி, அந்த நூறு நாட்களிலேயே பத்தொன்பதாவது அரசிலமைப்புத் திருத்தத்தையும் கொண்டுவந்து புரட்சிசெய்து காட்டினாரோ அதேபோல, இப்போது தனி ஒருவனாக இருந்துகொண்டு தனது ஆட்டத்தை தொடங்கவிருக்கிறார் ரணில்.

அவரைக் கைவிட்டு சஜித் பிரேமதாச பின்னால் சென்றவர்கள் எல்லோரும் ஒருவர் பின் ஒருவராக அவரை நோக்கி வரத்தொடங்கியிருக்கின்றனர்.

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்றக் குழுக் கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றபோது, நாட்டில் நிலவும் அராஜக நிலையை போக்குவதற்கு கட்சி என்ற ரீதியில் நடவடிக்கை எடுக்கவேண்டும் என கட்சியின் முன்னணி உறுப்பினர்கள் பலரும் கட்சித் தலைவரிடம் யோசனை தெரிவித்தபோதிலும், கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாசவிடமிருந்து சாதகமான பதில் எதுவும் கிடைக்கவில்லை என்றும், இதேவேளை, இந்த காரசாரமான விவாதங்களுக்கு மத்தியில் பாராளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ கட்சியை விட்டு விலகுவதாக கட்சித் தலைவரிடம் தெரிவித்தார் என்றும் கூறப்பட்டது.

நாட்டைப் பற்றிய சிந்தனை இல்லாது, கட்சியின் எதிர்காலம் குறித்து மட்டுமே சஜித் கரிசனைகொள்வதாக பலரும் புலம்பத் தொடங்கியிருக்கின்றனர்.

இதனையும் ரணில் தனக்கு சாதகமாக்கி வருகிறார்.

**- ஊர்க்குருவி**





இருபாலை - கற்பக பிள்ளையார் ஆலயத்தின் வருடாந்த பெருந் திருவிழா நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.
(படங்கள்: ஐ.சிவசாந்தன்)

## வடக்கு பாடசாலைகளில் மாணவர் வருகை வீழ்ச்சி!

யாழ்ப்பாணம், மே 13

வடக்கு மாகாண பாடசாலைகள் நேற்று ஊரடங்கு தளர்வை தொடர்ந்து ஆரம்பமானபோதும் மாணவர்க ளின் வருகையில் பெரும் வீழ்ச்சி காணப்பட்டது.

நாட்டில் நிலவும் அசாதாரண நிலைமையை தொடர்ந்து நாடு முழுவதும் இரு நாட்கள் ஊரடங்கு உத்தரவு விதிக்கப்பட்டது. இந்த ஊரடங்கு உத்தரவு நேற்று காலை 7 மணிக்கு தளர்த்தப்பட்டு, பிற்பகல் 2 மணிக்கு நடைமுறைக்கு வந்தது.

காலை 7 மணிக்கு ஊரடங்கு தளர்த்தப்பட்டமையால், நகரப் பாடசாலைகளுக்கு வருகை தரும் மாணவர்களின் விகிதம் கடுமையாகக் குறைந்திருந்தது. இதேபோன்று பாடசாலை நிறைவுறும் தருணத்தில் மீள ஊரடங்கு சட்டம் அமுலானமையாலும் பெரும்பாலான மாணவர்கள் பாடசாலைகளுக்கு சமுகமளிக்கவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-3)

## அருளாசியுரையும் வேதபாராயணமும்

யாழ்ப்பாணம், மே 13

உலகெங்கும் வாழும் மக்கள் கொரோனாவிலிருந்து விடுபட வேண்டிஇந்து சமய கலாசார திணைக்கமள் நடத்தும் இறை ஆசி வேண்டி பிரார்த்தனை நடத்துகிறது. இந்தப் பிரார்த்தனை வரிசையில் நாளை காலை 6.30 மணிக்கு கிளிநொச்சி இராமநாதபுரம் ஆறுசந்தி நாக பூசனி அம்பாள் ஆலய பிரதம குருக்கள் அமிர்த ஸ்ரீஸ்கந்தராஜக் குருக்களின அருளாசி உரையும் வேதபாராயண நிகழ்வும் இடம் பெறவுள்ளது. இது இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ் சேவை யில் நேரடியாக ஒலிபரப்பாகும். (ஐ)

ஈழநாடு
Eelanadu
13.05.2022 வெள்ளிக்கிழமை
பிலவ வருடம், சித்திரை 30

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

## தமிழர்களுக்கு கிடைக்கப்போவது?

தென்னிலங்கையின் அரசியல் கொந்தளிப்பு தமிழர்களுக்கு எவ்வகையான மாற்றங்களை ஏற்படுத்தும் - ஏற்படுத்துமா - என்னும் கேள்விகள் தமிழ் சூழலிலுண்டு. மஹிந்த ராஜபக்ஷ பதவி விலகியதைத் தொடர்ந்து ஏற்பட்ட அரசியல் குழப்பநிலையை சரி செய்யும் நகர்வுகள் இடம்பெற்றுவருகின்றன. ஒரு புறம் "கோட்டா கோ ஹோம்" - போராட்டக்காரர்கள் தொடர்ந்தும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை பதவி விலகுமாறு கோரிவருகின்றனர்.

இந்தப் பின்னணியில்தான், புதிய பிரதமர் தொடர்பில் கவனம் செலுத்தப்படுகின்றது. பிரதமராக எவர் நியமிக்கப்பட்டாலும் இப்போதைக்கு தமிழர் விவகாரம் ஒரு விடயமாக இருக்கப் போவதில்லை. ஏனெனில், இடைக்கால அரசாங்கத்தின் முதல் பணி, பொருளாதார நெருக்கடியிலிருந்து மக்களை ஓரளவு மூச்சுவிடச் செய்வதுதான். அது அவசியமான பணியென்பதில் முரண்பட ஏதுமில்லை. ஏனெனில், மக்கள் மோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றனர். அவர்கள் மூச்சுவிட வேண்டியிருக்கின்றது.

ஆனால், தமிழர் அரசியலை பொறுத்தவரையில், எந்தவொரு புதிய மாற்றங்களும் ஏற்படப்போவதில்லை. அதற்கான வாய்ப்புக்களும் இல்லை. அடுத்த ஜனாதிபதி தேர்தல், பொதுத் தேர்தலுக்கு பின்னர்தான், சில மாற்றங்களை எதிர்பார்க்க முடியும். இதற்கிடையில், நிறைவேற்றதிகாரத்தை குறைக்கும் யோசனை முன்வைக்கப்பட்டால், அந்த யோசனையுடன் மாகாண சபையை சுயாதீனமாக இயங்கச் செய்வதற்கான, சில ஏற்பாடுகள் தொடர்பில் கூட்டமைப்பு சில கோரிக்கைகளை முன்வைக்கலாம். இது தவிர, வேறு எதனையும் தமிழர்கள் எதிர்பார்க்க முடியாது.

இலங்கையின் அரசியலில் அடிப்படையான கட்டமைப்புசார் மாற்றங்கள் ஏற்பட்டாலன்றி, எதனையும் செய்ய முடியாது. அவ்வாறான அடிப்படையான மாற்றங்கள் எவையும் உடனடியாக நடக்கப் போவதில்லை. ஏனெனில், அதற்கான அரசியல் புரிதலுடன் ஒரு புதிய சிங்கள தலைமுறை வெளியில் வரவில்லை. இப்போது வெளியில் வந்திருக்கும் தலைமுறை, அடிப்படையில் ராஜபக்ஷ குடும்பத்தின் ஆட்சிக்கு எதிரானது. அவர்களால் தாங்கள் ஏமாற்றப்பட்டுவிட்டோம், என்னும் ஆவேசத்தில் இருக்கும் தலைமுறை.

பொருளாதார நெருக்கடி பாரதூரமாக அவர்களை தாக்காதிருந்திருந்தால், இந்தளவிற்கு ராஜபக்ஷக்களுக்கு எதிராக அவர்கள் திரும்பியிருக்கமாட்டார்கள். தொடர்ந்தும் ராஜபக்ஷக்களின் இனவாத, பௌத்த மாயைக்குள் சிக்குண்டு, தமிழர்களை மட்டுமே விரோதிகளாக சிந்தித்திருப்பர். ஆனால், இப்போது தாங்கள் இனவாதத்தின் பெயரால், மதவாதத்தின் பெயரால், ஏமாற்றப்பட்டுவிட்டோம் என்னும் குற்றவுணர்வும், ஆவேசமுமே அவர்களிடம் மேலோங்கியிருக்கின்றது. இந்த ஆவேசம் அடங்கியவுடன், அவர்கள் மீளவும் பழைய அரசியல் முறைமைக்குள் காணாமல் போய்விடலாம். ஏனெனில், அடிப்படையான மாற்றங்கள் தேவையென்னும் நோக்கில் அவர்கள் ஒன்றுபடவில்லை. அதற்கான தலைமைத்துவமும் அவர்களுக்கு வழங்கப்படவில்லை.

ஆனால், இனவாதம் - மதவாதத்தை கடந்து சிந்திக்க வேண்டுமென்னும் புரிதல் படித்த சிங்கள இளைஞர்கள், யுவதிகள் மத்தியில் ஏற்பட்டிருப்பது உண்மைதான். ஆனால், அவற்றுக்கான அரசியல் தலைமைத்துவத்தை வழங்கப் போவது யார் -என்னும் கேள்வியில்தான், அவர்களின் எதிர்கால செயல்பாடுகள் தங்கியிருக்கின்றன. எனவே, இன்றைய நிலையில், எவர் பிரதமராக வந்தாலும் - தமிழர் பிரச்னையில் எந்தவொரு மாற்றமும் ஏற்படப் போவதில்லை. மேலும் எதிர்காலத்திலும் அதற்கான வாய்ப்புக்கள் இல்லை. தமிழர் தலைமைகள் சூழ்நிலைகளை எவ்வாறு கையாள்கின்றனர் - அதற்காக எவ்வாறு ஒற்றுமையுடன், தந்திரோபாயமாக செயலாற்றுகின்றனர் என்பதில்தான், விடயங்கள் தங்கியிருக்கின்றன.

# இராணுவ ஆட்சி பற்றிய அச்சம்!

**அனந்த பாலகிடணர்**

இலங்கையில் இராணுவ பிரசன்னம் கடந்த ஒரு சில தினங்களில் அதிகரித்துள்ளதை நோக்கும்போது இராணுவ ஆட்சியொன்று ஏற்படுவதற்கான சூழலொன்று விரைந்து உருவாகி வருகின்றதோ என்றே எண்ணத்தோன்றுகின்றது.

கொழும்பிலும், சுற்றுப்புறங்களிலும் சில தினங்களுக்கு முன்னர் ஏற்பட்ட கலவர நிலமையையடுத்து தற்போது இராணுவத்தினர் கவச வாகனங்கள் சகிதம் கொழும்பின் முக்கிய இடங்களில் ரோந்து செல்ல ஆரம்பித்துள்ளனர். அத்துடன், அசாதாரண நிலைமைகள் கட்டுமீறாதிருப்பதை உறுதி செய்யும் விதத்தில் ஊரடங்குச் சட்டங்களும் பிறப்பிக்கப்பட்டு வருகின்றன. இதன்காரணமாகவே இராணுவ ஆட்சியொன்று ஏற்பட்டு விடுமோ என்று மக்கள் மத்தியில் அச்சம் ஏற்பட்டுள்ளது. எது எப்படியிருந்தபோதிலும் காலிமுகத்திடலில் அமைக்கப்பட்டுள்ள "கோட்டா கோ கம"வில் இருந்து வருகின்ற மக்கள் மத்தியில் ஜனாதிபதி கோட்டாபயவையும் இன்றைய அரசாங்கத்தையும் கவிழ்க்க வேண்டுமென்ற திடசங்கற்பம் மேலும் அதிகரித்துள்ளதையே அவதானிக்க முடிகின்றது.

மக்கள் சக்தி ஒரு மாபெரும் சக்தி என்பதை நிருபிப்பதாகவே பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கொழும்பிலிருந்து வெளியேறி திருகோணமலையில் தஞ்சம் புகுந்துள்ளமை விளங்குகின்றது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் சகோதரர் கோட்டாபய ராஜபக்ஷ நிறைவேற்றதிகாரமுள்ள ஜனாதிபதியாக இருக்கின்ற போதிலும் நிலமையைக் கட்டுப்படுத்த அவரால்கூட முடியாத அளவுக்கு அசாதாரண நிலவரம் மேலோங்கியிருந்தது.

இத்தகைய நிலைமையிலேயே மோசமான சூழ்நிலைகளைக் கட்டுப்படுத்த இராணுவ ஆட்சி கொண்டுவரப்படலாம் என்ற அச்சம் நிலவியிருந்தது. கூடவே, அமெரிக்க இராஜாங்க திணைக்களமும் இலங்கையில் இராணுவ பிரசன்னம் அதிகரித்துள்ளமை குறித்து தனது கரிசனையையும் வெளியிட்டிருந்தது.

இருந்தபோதிலும் இலங்கையில் இராணுவ ஆட்சி ஏற்படாது என்று பாதுகாப்புச் செயலாளரும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு மிக நெருங்கியவருமான மேஜர் ஜெனரல் கமல் குணரத்ன தெரிவித்துள்ளார்.

இராணுவ ஆட்சி என்று குறிப்பிடுவதை நோக்கும்போது தற்போது நாட்டில் நிலவுவதுகூட ஏறத்தாழ ஓர் இராணுவ ஆட்சியை ஒத்ததாகவே இருக்கின்றது. ஏனெனில், ஜனாதிபதி ஓர் இராணுவ பின்னணி கொண்டவராகவும் அவரைச்சார்ந்தேர்கூட இராணுவ பின்னணியைக் கொண்டிருக்கின்றனர். அத்துடன், ஆயுதப்படையினர் நாட்டில் களமிறக்கப்பட்டுள்ளமையை நோக்கும்போது இராணுவ ஆட்சியொன்றின் சாயல்கள் வெளிப்படுகின்றமையையும் காண முடிகின்றது.

இதேவேளை நாட்டில் தலைதூக்கியுள்ள அசாதாரண நிலவரம் தொடர்பாக அரசாங்கத்தின் நிலைப்பாட்டை எடுத்தியம்பும் விதத்தில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாட்டு மக்களுக்கு விசேட உரையொன்றையும் ஆற்றியிருந்தார்.

அந்த உரையில் இந்த வாரத்தினுள் புதிய பிரதமர் மற்றும் அமைச்சரவை ஆகியவற்றையும் தாம் நியமிக்கப்போகிறார் என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கூறியிருந்தார்.

இதன்மூலம் ஒன்று மட்டுமே உறுதியாகியுள்ளது. பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மீளவும் பிரதமர் பதவியில் அமர்தப்பட மாட்டாரென்பதுவும், புதிய அமைச்சரவை அமைக்கப்பட வேண்டுமென்பதில் ஜனாதிபதியும் உறுதியாக இருக்கின்றார் என்பதுமேயாகும்.

எது எப்படியிருந்த போதிலும் புதிய அமைச்சரவை மற்றும் புதிய பிரதமர் ஆகியோரது நியமனங்கள் இடம்பெறும் பட்சத்தில் "புதிய மொந்தையில் பழைய கள்" என்ற நிலைமையே ஏற்படுவதாக இருக்கும்.

இடைக்கால அரசு மற்றும் புதிய பிரதமர் புதிய அமைச்சரவை என்பதெல்லாம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தம்மையும் அவரது சகோதரரான பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் அவரைச் சார்ந்தோரையும் தற்போதைய நிலவரத்தில் மக்களின் ஆக்ரோஷத்திலிருந்து காப்பாற்றும் ஒரு நடவடிக்கையாக இருக்கமுடியுமே தவிர நாட்டு நலன்கருதியதாக இருக்க முடியாதென்றே கருத முடியும். ஏனெனில், கடந்த ஒருமாதத்துக்கு மேலாக காலிமுகத்திடலில் எதிரொலிக்கும் முக்கிய கோஷமாக இருப்பது கோட்டா கோ அதாவது ஜனாதிபதி கோட்டாவே பதவியிலிருந்து விலகிவிடு என்பதாகவே இருக்கின்றது.

இந்த ஆக்ரோஷத்தின் வெளிப்பாடாகவே கடந்த சிலதினங்களுக்கு முன்னர் மக்கள் கிளர்ந்தெழுந்த சம்பவங்களும் இடம்பெற்றிருந்தன.

அத்துடன், நாட்டு மக்களின் எதிர்பார்ப்பை பிரதிபலிப்பது போலவே முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தற்போதைய நாட்டு நிலவரத்தை சீர்செய்ய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகுவதைத்தவிர வேறு வழியில்லை என்று அழுத்தம் திருத்தமாக கூறியுள்ளார். அத்துடன் ஆறு மாதங்களுக்குள் தேர்தல் நடத்தப்பட வேண்டுமெனவும் சந்திரிகா குறிப்பிட்டுள்ளார்.

நாட்டு மக்கள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோர்மீது மிகவும் வெறுப்படைந்துள்ளனர். இந்நிலையில் புதிய பிரதமர் மற்றும் புதிய அமைச்சரவையோடு கூடிய இடைக்கால அரசாங்கம் என்பவை போன்ற விடயங்கள் கூட கொதித்தெழுந்துள்ள மக்களை திருப்திப்படுத்துவதாக அமைந்துவிடாது.

எனவே, சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க குறிப்பிட்டது போல உடனடியாகவே ஜனாதிபதி பதவி விலகுவதோடு விரைவில் தேர்தல் ஒன்றை நடத்துவதே நாட்டு நலன் கருதியதாகவும் மக்களின் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்வதாகவும் இருக்க முடியும்.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



ஈழநாடு



மே - 13 வெள்ளிக்கிழமை
சுபகிருது வருடம் - சித்திரை 30
நல்ல நேரம் : 09.00 - 10.30
ராகு காலம் : 10.30 - 12.00
திதி : துவாதசி




**மேடம்**

பண வரவு அதிகரிக்கும். குடும்பத் தேவைகளை நிறைவேற்றுவீர்கள்.நம்பிக்கையுடன் நினைத்த செயலில் முன்னேற்றம் காண்பீர்கள்.தொழிலை விரிவுபடுத்தும் முயற்சியில் வெற்றி உண்டாகும்.

**இடபம்**

உத்தியோகத்தில் இருந்து வந்த பிரச்னை நீங்கும். நிம்மதி உண்டாகும்.விருந்தினர் வருகையால் குடும்பத்தில் மகிழ்ச்சி ஏற்படும்.புதியவர்களின் அறிமுகத்தால் லாபம் ஏற்படும். பண வரவு உண்டு.

**மிதுனம்**

முக்கியமான செயல்களில் ஈடுபட்டு வெற்றி பெறுவீர்கள். தாயாரின் உடல்நிலையில் கவனம் தேவை. எதிர்பார்ப்பு நிறைவேறும். தொழில், உத்தியோகத்தில் லாபம் உண்டாகும்.

**கடகம்**

ஆதாயம் அதிகரிக்கும். வீட்டிற்குரிய நவீன சாதனங்களை வாங்குவீர்கள்.அரசு வகையில் லாபம் காண்பீர்கள். உத்தியோகத்தில் இருந்து வந்த நெருக்கடி விலகும்.

**சிம்மம்**

எதிர்பார்த்த செய்தி வீடு தேடி வரும். தொழிலில் வெற்றி உண்டாகும்.புதிய செயல்களுக்கு முயற்சிப்பீர்கள். எதிர்பாராத லாபம் கிடைக்கும்.சகோதர வகையில் ஆதரவு உண்டாகும்.

**கன்னி**

குழப்பங்கள் உண்டாகி திட்டமிட்டபடி செயல் முடியாமல் போகும்.ஒருசிலரின் செயல்பாட்டால் மன அழுத்தம் அடைவீர்கள்.அமைதி காக்க வேண்டிய நாள். புதிய முயற்சி தள்ளிப்போகும்.

**துலாம்**

திடீர் செலவு ஏற்படும். வாகனப்பயணத்தில் எச்சரிக்கை தேவை. செலவு செய்து சில வேலைகளை முடிப்பீர்கள்.உடல்நிலையில் கவனம் தேவை. நண்பர்கள் வழியில் சங்கடம் தோன்றி மறையும்.

**விருட்சிகம்**

தொழிலில் வெற்றி காண்பீர்கள். பண வரவால் குடும்பத்தில் மகிழ்ச்சி ஏற்படும்.உங்கள் திட்டங்கள் நிறைவேறும். உத்தியோகத்தில் யோகமான நாள். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் விலகும்.

**தனுசு**

நேற்றைய செயல் ஒன்று இன்று நிறைவேறும். நண்பர்கள் அறிமுகமாவார்கள்.தொழிலில் திட்டமிட்ட செயல் ஒன்று வெற்றியாகும். பிள்ளைகளின் படிப்பிற்காக சில முயற்சிகளை மேற்கொள்வீர்கள்.

**மகரம்**

நேற்றுவரை இருந்த நெருக்கடியில் மீள்வீர்கள். புதிய பாதையில் பயணிப்பீர்கள்.எதிர்பார்த்த இடங்களில் இருந்து உதவி கிடைக்கும் நாள். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**கும்பம்**

எதிர்பார்க்காத செயலில் பிரச்னை தலைதூக்கும். அமைதி தேவை.பணியிடத்தில் சங்கடம் தோன்றி மறையும். நட்பு வட்டம் பெருகும்.தேவையற்ற விவாதங்களில் ஈடுபட வேண்டாம்.

**மீனம்**

தொழிலில் இன்று நம்பிக்கையுடன் செயல்பட்டு வெற்றி காண்பீர்கள்.வீட்டிற்கான தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள். உங்கள் திறமை வெளிப்படும். தொழிலில் உங்கள் கை ஓங்கும்.

# இலங்கைக்கு அரிசி கொள்வனவு; தடை விதிக்க நீதிமன்று மறுப்பு!



*சென்னை, மே 13*

பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள இலங்கைக்கு வழங்குவதற்காக அதிக விலைக்கு 40 ஆயிரம் தொன் அரிசி கொள்முதல் செய்ய ஒப்புதல் அளித்த அரசாணைக்கு தடை விதிக்க சென்னை உயர் நீதி மன்றம் மறுத்து உத்தரவிட்டுள்ளது.

சென்னை உயர் நீதிமன்றில் பொது நல வழக்காக தாக்கல் செய்யப்பட்ட வழக்கில், இலங்கை மக்களுக்கு வழங்குவதற்காக 40 ஆயிரம் தொன் அரிசி கொள்முதல் செய்ய அரசு முடிவெடுத்தாக அறிவிக்கப்பட்டது. இந்த அரிசி அதிகவிலைக்குவாங்கப்படுகிறது. ஒரு கிலோ அரிசி 33 ரூபாய் 50 காசுகளுக்கு என்ற அடிப்படையில் 40 ஆயிரம் தொன் அரிசி கொள்முதல் செய்ய 134 கோடி ரூபாயை ஒதுக்கி அரசு அரசாணை பிறப்பித்துள்ளது.


இந்திய உணவுக் கழகம் ஒரு கிலோ அரிசியை 20 ரூபாய் என்ற விலையில் விற்பனை செய்து வருகிறது. எனவே, அங்கிருந்து அரிசி கொள் முதல் செய்யும் பட்சத்தில் 54 கோடி ரூபாய் மிச்சமாகும். இதுதொடர்பாக சமூக ஆர்வலர் கள் கேள்வி எழுப்பிய போது, இந்திய உணவுக் கழக அரிசி தரமற்றது எனவும், அரிசி கொள் முதல் செய்வது தொடர்பான தகவல்களை பரப்புவோருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப் படும் என அரசு எச்சரிக்கை விடுத்துள்ளது சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

கேள்விகோரல் வெளிப்படைத்தன்மை சட்டத்தை பின்பற்றாமல், அதிக விலைக்கு அரிசி கொள்முதல் செய்வது குறித்து லஞ்ச ஒழிப்புத்துறை விசாரிக்க உத்தரவிட வேண்டும். அரிசி கொள்முதலுக்கு ஒப்புதல் அளித்து பிறப் பித்த அரசாணைக்கு தடை விதிக்க வேண்டும் என்று மனுவில் கோரியிருந்தார்.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதிகள், மத்திய அரசின் அனுமதியுடன்தான் அரிசி அனுப்பப் படுகிறது. மேலும், அவசரநிலை நேரங்களில் கொள்முதல் செய்ய கேள்விகோரல் வெளிப் படைத்தன்மை சட்டத்தில் விலக்கு உள்ளதாக முன்வைக்கப்பட்ட வாதத்தை ஏற்று வழக்கைத் தள்ளுபடி செய்தனர். (ஐ)

# ராஜபக்ஷக்களுக்கு இந்தியாவின் எந்த மூலையிலும் இடம்வழங்காதீர்!

## நாம் தமிழர் சீமான்



*சென்னை, மே 13*

ராஜபக்ஷ சகோதரர்கள் இந்தியாவுக்கு அடைக்கலம் தேடி வரப்போகின்றனர் என்று செய்திகள் வெளியாகியுள்ளன, இரண்டு இலட்சம் தமிழர்களை துடிக்கப் படுகொலை செய்த அந்தக் கொடுங்கோலர்களுக்கு மத்தியில் ஆளும் மோடி தலைமை யிலான பா. ஜ. க. அரசு எக்காரணம் கொண்டும் இந்தியாவின் எந்த மூலையிலும் அரசியல் அடைக்கலம் அளிக்க முன்வரக்கூடாது என்று நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கி ணைப்பாளர் சீமான் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட் டுள்ள அறிக்கை:

இலங்கையில் ஏற்பட்டுள்ள கடும் பொருளா தார நெருக்கடி காரணமாக மக்கள் புரட்சி வெடித் துள்ளதை அடுத்து இனப்படு கொலையாளார் களான ராஜபக்ஷ சகோதரர்கள் உள்ளிட்ட அந்நாட் டின் ஆட்சியாளர்கள் மக்களால் ஓட ஓட விரட்டப்பட்டு அவர்களது வீடுகள் உள்ளிட்ட உடைமைகள் தீவைத்து எரிக்கப்படும் காட்சிகள் நாள்தோறும் வெளியாகி வருகின்றன.

சிங்கள இனவாதமும், பௌத்த மதவாதமும் இணைந்து தமிழ்த் தேசிய இனத்தின் அடிப்படை உரிமைகளை மறுத்து, அதன் விடுதலையைத் தகர்த்து, அதற்காகப் போராடிய மக்களை இனப்படுகொலை செய்து அழித்தொழித்தது.

மக்கள் நலனில் அக்கறை செலுத்தாமல் மத, இன வெறியை மக்களுக்கு ஊட்டி, தமிழர்கள் மீதான வன்மத்தை வளர்த்து, அதன் மூலம் மாறி மாறி அரசாண்ட சிங்கள கொடுங்கோன்மை ஆட்சியாளர்களே இன்று இலங்கையில் நடக்கும் அத்தனை துயரங்களுக்கும் மூல காரணம். அதற் குத் துணைபோன அப்பாவி சிங்கள மக்கள் ஐம்பதாண்டுகளாகத் தமிழ் மக்கள் அனுபவித்த கொடுமைகளை, பொருளாதார நெருக்கடிகளை இன்றைக்கு அனுபவித்து வருகின்றனர்.

ஒரு நாட்டில் உண்ண உணவும், குடிக்க நல்ல நீரும் கிடைக்காத போது அங்குப் புரட்சி ஏற்படுவதை ஒருபோதும் தடுக்க முடியாது என்பதற்கு நிகழ்காலச் சாட்சியாக இலங்கையில் நடைபெறும் நிகழ்வுகள் அமைந்துள்ளன. இன்று இலங்கைக்கு ஏற்பட்டுள்ள நிலை நாளை இந்தியாவுக்கும் ஏற்படலாம்.

எனவே இனியேனும் இந்திய பெருநாட்டை ஆளும் மோடி அரசாங்கம் மதத்தின் மூலம் மக்க ளைத் தூண்டி பிரித்தாளும் சூழ்ச்சியையும், தேசிய இனங்களின் உரிமைகளைப் பறித்து அவர்களின் மொழி, இலக்கியம், கலை, பண்பாடு ஆகியவற் றைச் சிதைத்து இந்தியாவை ஒற்றையாட்சியின் கீழ் கொண்டுவரும் கொடுங்கோன்மையை இனியாவது கைவிட வேண்டும்.

இல்லையென்றால் ஒற்றையாட்சியை நடைமுறைப்படுத்திய இலங்கையில் ஏற்பட்ட மக்கள் புரட்சி நாளை இந்தியாவிலும் ஏற்படும் நாள் வெகுதொலைவில் இல்லை என்பதை இந்திய ஆட்சியாளர்கள் உணர வேண்டும். (ஐ)

# பேரறிவாளன் விடுதலை வழக்கு; திகதி குறிப்பிடாமல் ஒத்திவைப்பு!

*புதுடில்லி, மே 13*

பேரறிவாளன் விடுதலை விவகாரத்தில் தமிழக ஆளுநர் மிகப்பெரிய அரசியல் சாசன பிழையை செய்துவிட்டார் என உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசு கடுமையாக குற்றம் சாட்டியது. இந்த வழக்கின் தீர்ப்பை உச்ச நீதிமன்றம் திகதி குறிப்பிடாமல் தள்ளி வைத்துள்ளது.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் 30 ஆண்டுகளுக்கும் மேலாக சிறை தண்டனை அனுபவித்து வரும் பேரறிவாளனை விடுதலை செய்யக் கோரி தொடரப்பட்ட வழக்கு, உச்ச நீதிமன்றில் நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்த போது இவ்வாறு திகதி குறிப்பிடாமல் வழக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

முன்னதாக உயர்நீதிமன்றம் பேரறிவாளனின் விடுதலையில் மத்திய அரசு, மாநில அரசு முடிவு எடுக்காது விடின் தாமே முடிவு எடுத்து அவரை விடுதலை செய்வோம் என்று கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பாதுகாப்பு நிலவரம் குறித்து சரத்துடன் கோட்டா பேச்சு!

## சிங்கள இணையத்தளம் தகவல்

கொழும்பு, மே. 13

**நாட்டின் தற்போதைய பாதுகாப்பு நிலைமை தொடர்பாகவே பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவுடன் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தொலைபேசியில் தொடர்பு கொண்டு உரையாடியதாக சிங்கள இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.**

இது தொடர்பாக அந்த இணையத்தளத்தில் நேற்று வியாழக்கிழமை வெளியான செய்தியில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:

நாட்டின் பாதுகாப்பு நிலைமை தொடர்பாக ஜனாதிபதி கோட்டா பய ராஜபக்ஷ கடந்த சில நாட்க ளாக பீல்ட் மார்ஷல் சரத் பொன் சேகாவை தொலைபேசியில் தொடர்பு கொண்டு உரையாடி வருகின்றார்.

பாதுகாப்பு தொடர்பில் எடுக்கப்படவேண்டிய சில முக்கிய தீர்மானங்கள் தொடர்பாக ஜனாதிபதியுடன் கருத்துக்களை பரிமாறிக் கொண்டதாக சரத் பொன்சேகாவுக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த இரண்டு நாட்களாக கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் சரத் பொன்சேகாவுக்கும் இடையே பல தொலைபேசி உரையாடல்கள் இடம்பெற்றுள்ளன.

நாட்டின் தற்போதைய பொரு ளாதார நிலைமை உள்ளிட்ட அர சியல் விடயங்களே தொலைபேசி யில் உரையாடப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, நாட்டின் பிரதமராக பதவியேற்குமாறு சரத் பொன்சேகாவை கோட்டாபய ராஜபக்ஷ இன்று(நேற்று) காலை அழைத்ததாக பல்வேறு ஊடகங் கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இது தொடர்பில் நாம் வினவிய போது, சரத் பொன்சோகவுடன் அரசி யல் விவகாரங்கள் தொடர்பில் கோட்டாபய ராஜபக்ஷ கலந்துரை யாடியதாகவும், இன்று(நேற்று) காலை சில முக்கிய தீர்மானங்களை எடுக்க வாய்ப்பு உள்ளதாகவும் சரத் பொன்சேகா வுக்கு நெருக்கமான வட் டாரங்கள் தெரிவித்தன என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## பஸிலுக்கு எதிரான காணி வழக்கு: நீதிமன்றத்தின் தீர்மானம் இன்று

கொழும்பு, மே. 13

முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ஷ மற்றும் திருக்குமார் நடேசன் ஆகியோருக்கு எதிராக அரச நிதி முறைக்கேடு தொடர்பில் சட்டமா அதிபரினால் தாக்கல் செய்யப்பட்டுள்ள 3 வழக்கு விசாரணைகளை தொடர்வதா இல்லையா என்பது தொடர்பில் கம்பஹா மேல் நீதிமன்றம் இன்று தீர்மானத்தை அளிக்க வுள்ளது.

தொம்பே - மல்வானை - மாபிட்டிகம பிரதேசத் தில் 16 ஏக்கர் காணியை கொள்வனவு செய்தமை, பிரமாண்டமான வீடு மற்றும் நீச்சல் தடாகம் ஒன்றை நிர்மாணித்தமை, பண்ணை ஒன்றை நடத்தியமை மற்றும் அரச நிதியை முறைக்கேடாக பயன்படுத் தியமை ஆகிய குற்றச்சாட்டுகளின் கீழ் சந்தேகநபர் களுக்கு எதிராக சட்டமா அதிபரால் வழங்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (அ)

## எகிறும் டொலரின் பெறுமதி!

கொழும்பு, மே. 13

இலங்கையில் உரிமம் பெற்ற சில வணிக வங்கிகள் நேற்று அமெரிக்க டொலரின் விற்பனை விலையை 380 ரூபாவாக நிர்ணயித்துள்ளன. டொலரின் கொள்முதல் விலை 365 ரூபாவாக பதிவாகியுள்ளது.

எவ்வாறாயினும், இலங்கை மத்திய வங்கியின் தரவுகளின்படி, அமெரிக்க டொலர் ஒன்றின் விற்பனை விலை இன்னமும் 374 ரூபா 99 சதமாகவே உள்ளது. அதன் கொள்முதல் விலை 361 ரூபா 72 சதமாகக் காணப்படுகின்றது. (அ)

# ராஜபக்ஷக்களுக்கு வக்காலத்து வாங்குவதை சுப்பிரமணிய சுவாமி உடன் நிறுத்தவேண்டும்

## அசாத் சாலி எச்சரிக்கை

கொழும்பு, மே. 13

இந்தியாவின் முன்னாள் அமைச் சர் சுப்பிரமணிய சுவாமி, ராஜபக்ஷக் களை பாதுகாக்க வக்காலத்து வாங்கு வதை உடன் நிறுத்த வேண்டும் என தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவ ரும் மேல் மாகாண முன்னாள் ஆளுந ருமான அசாத் சாலி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

காலிமுகத்திடலில் மஹிந்தவின் அராஜகக் கும்பல் அமைதியான மக்கள் போராட்டத்தைக் குழப்பிய டித்து, அறவழிப் போராட்டத்தில் ஈடுபட்ட அப்பாவி இளைஞர், யுவதிகள் மீது மூர்க்கத்தனமான தாக்குதல் நடத்தியமைக்கு எதுவித கண்டனமும் தெரிவிக்காத சுப்பிர மணிய சுவாமி, ராஜபக்ஷக்களுக்கு பங்காளி வேலை பார்த்துக்கொண் டிருப்பதை கைவிடவேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.



அவர் மேலும் தெரிவிக்கையில்- ராஜபக்ஷக்களுடன் வியாபார டீல் வைத்துள்ள சுப்பிரமணிய சுவாமி, இந்திய இராணுவத்தை இலங்கைக்கு அனுப்புமாறு ருவிட் டர் செய்தி ஒன்றில் கோரிக்கை விடுத்துள்ளார்.

பி.ஜே.பியின் அடிவருடியான இவர், இந்தியாவில் உள்ள முஸ் லிம்களை இந்தியப் பிரதமர் மோடி கருவறுப்பதற்கு துணை நின்றவர். அதேபோன்று, இலங்கையில் சிறுபான்மை மக்களை ராஜபக்ஷ அரசு துவம்சம் செய்வதற்கும் ஒத்தா திக்கொண்டிருப்பவர்

இலங்கை மக்கள், தமது நாட்டு இராணுவத்தில் நம்பிக்கை கொண்டி ருக்கின்றனர். இங்குள்ள பிரச்னை களை சுமுகநிலைக்கு கொண்டுவர அவர்களிடம் போதிய ஆள்பலம் உண்டு. எனவே, இங்கு வெளி இரா ணுவம் தேவையில்லை என்பதையும் சுப்பிரமணிய சுவாமி புரிந்துகொள் வதுடன், இந்திய இராணுவம் இலங்கையில் நிலைகொண்டிருந்த போது வடக்கு, கிழக்கு மக்கள் மீது மேற்கொண்ட அட்டூழியங்களையும் சுப்பிரமணிய சுவாமி மீட்டிப்பார்க்க வேண்டும்-என்றார். (அ)

# பிரதமரை நியமிக்கும் அதிகாரம் ஜனாதிபதி கோட்டாவுக்கு உண்டு

## முன்னாள் தேர்தல் ஆணையாளர் கூறுகிறார்

கொழும்பு, மே. 13

இலங்கையில் பிரதமரை நியமிக்கும் அதிகாரம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு உண்டு என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளர் மஹிந்த தேசப் பிரிய தெரிவித்துள் ளார்.



இது தொடர் பாக அவர் மேலும் கூறியதாவது:

எந்தவொரு கட்சியும் பிரதமர் பதவிக்கு தமது சார்பில் ஒருவரை நியமிக்காதுவிட் டால் பிரதமர் பதவிக்கு ஒருவரை நியமிக்கும் அதிகா ரம் ஜனாதிபதிக்கு உண்டு.

பாராளுமன்ற உறுப்பினர்களின் பொறுப் பற்ற செயற்பாடுகளினால் இந்த நிலை ஏற்பட் டுள்ளது-என்றார். (அ)

# தமிழினப் படுகொலையை நினைவு கூர்ந்து நேற்று நல்லூரில் “முள்ளிவாய்க்கால் கஞ்சி”





யாழ்ப்பாணம், மே. 13

மே-18 முள்ளிவாய்க்கால் நினைவு வாரத்தை முன் னிட்டு தமிழினப் படுகொலையை நினைவுகூரும் வகையில் நல்லூரில் “முள்ளிவாய்க்கால் கஞ்சி“ காய்ச்சி வழங்கப்பட் டுள்ளது.

வடக்கு-கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரது உறவுகள் அமைப்பின் யாழ். மாவட்ட உறவுகளால் நல்லூரில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபன் நினைவாலயத்துக்கு முன் பாக “முள்ளிவாய்க்கால் கஞ்சி” காய்ச்சி வழங்கப்பட்டது.

மே-18 முள்ளிவாய்க்கால் நினைவு வாரத்தின் முதலா வது நாள் நிகழ்வுகள் நேற்று முன்னெடுக்கப்பட்டதை யடுத்து நல்லூரில் வடக்கு-கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரது உறவுகள் அமைப்பின் யாழ். மாவட்ட உறவுகளால் “முள்ளிவாய்க்கால் கஞ்சி” காய்ச்சி வழங்கப்பட்டது.

நல்லூர் தியாக தீபம் திலீபன் நினைவாலய பகுதியில் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த விசேட அதிரடிப்படை யினருக்கும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரது உறவு களால் “முள்ளிவாய்க்கால் கஞ்சி” வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-03)

## ஜனாதிபதிக்கு எதிரான பிரேரணை 17ஆம் திகதி விவாதத்துக்கு வருகிறது

கொழும்பு, மே. 13

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிராக பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியால் முன்வைக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை மீது பாராளுமன்றத்தில் எதிர்வரும் 17 ஆம் திகதி விவாதம் நடத்தப்படவுள்ளது.

சபாநாயகர் மஹிந்தயாப்பா அபேவர்தன தலைமையில் நேற்று முற்பகல், பாராளு மன்ற கட்டடத் தொகுதியில் நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்திலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

குறித்த பிரேரணை நிறைவேறினால்கூட ஜனாதிபதியை பதவி நீக்கம் செய்யமுடி யாது. எனினும், ஜனாதிபதி மீது பாராளுமன் றத்தின் அவநம்பிக்கையை அதன் மூலம் வெளிப்படுத்தலாம். (அ)

# நாட்டை முன்னோக்கி நகர்த்த புதிய அரசுக்கு முழு அதிகாரம்

## ஜனாதிபதி கோட்டாபய அறிவிப்பு

**கொழும்பு, மே 13**

**இலங்கையில் அமைய உள்ள புதிய அரசாங்கத்திற்கு புதிய திட்டங்களை முன்வைக்க வாய்ப்பு வழங்கப்படும். அத்துடன், நாட்டை முன்னோக்கி கொண்டு செல்வதற்கான அதிகாரம் அளிக்கப்படும் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

மேலும், 19ஆவது திருத்தச் சட்டத்தின் உள்ளடக்கங்களை மீண்டும் நிறைவேற்றி, பாராளுமன்றத்துக்கு மேலும் அதிகாரம் அளிக்கும் வகையில் அரசியலமைப்பில் திருத்தம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் உறுதியளித்துள்ளார்.

நேற்று முன் தினம் நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையைத் தொடர்ந்து நேற்று காலை தனது ருவிட்டரில் ஜனாதிபதி இவ்வாறு பதிவிட்டுள்ளார்.

அவர் தனது பதிவில்-

நாடு மோசமாக நிலைக்குத் தள்ளப்படுவதைத் தடுக்கவும், முடங்கியுள்ள அரசின் செயற்பாடுகளை மீண்டும்



துரிதமாக முன்னெடுக்கவும் ஏதுவாக புதிய அரசை அமைக்க துரித நடவடிக்கை எடுக்கப்படும்.

பாராளுமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபிக்கும், மக்களின் நம்பிக்கையைப் பெறக்கூடிய ஒருவர் பிரதமராக இந்த வாரத்துக்குள் நியமிக்கப்படுவார்.

அத்துடன், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை நீக்குவதற்கு பல்வேறு தரப்பினர் விடுத்த கோரிக்கைகள் குறித்து பரிசீலிக்கப்படும். புதிய அரசாங்கம் அமைந்ததும் இது குறித்து விவாதிக்கப்படும்.

இதேவேளை, மக்களின் உயிர்கள் மற்றும் அவர்களின் உடைமைகளைப் பாதுகாப்பதற்காக அரசு இயந்திரத்தின் தடையற்ற செயல்பாட்டைப் உறுதி செய்ய உதவுமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். அத்தியாவசிய பொருட்களின் தொடர்ச்சியான விநியோகங்களுக்கு இடையூறு விளைவிக்க வேண்டாம் எனவும் கேட்டுக் கொள்கிறேன்-என்று குறிப்பிட்டுள்ளார். (அ)

# அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நியமனம்

கொழும்பு, மே 13

அத்தியாவசிய சேவைகளை வழங்குதல் மற்றும் பராமரித்தல் தொடர்பான அனைத்து செயற்பாடுகளையும் செயல்படுத்துவதற்கும் ஒருங்கிணைப்பதற்கும் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் மற்றும் இரண்டு மேலதிக ஆணையாளர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி, இலங்கை நிர்வாக சேவையின் விசேட தரப் பிரதானியான கே.டி.எஸ். ருவன் சந்திர அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகமாகவும் மேலதிக ஆணையாளர்களாக விவசாய அமைச்சின் முன்னாள் செயலாளர் ரோஹன புஸ்பகுமார மற்றும் தபால் மா அதிபர் ரஞ்சித் ஆரியரத்ன ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, அதன் ஒருங்கிணைப்பு அதிகாரிகளாக 25 மாவட்டங்களின் செயலாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதியினால் இந்த நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# தேசபந்து தென்னக்கோனுக்கும் மனித உரிமைக் குழு அழைப்பு

கொழும்பு, மே 13

மேல் மாகாணத்துக்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் இன்று மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

மனித உரிமை ஆணைக்குழுவில் நேற்று முன்தினம் ஆஜரான பொலிஸ்மா அதிபர் மற்றும் இராணுவத் தளபதி ஆகியோர் முன்வைத்த விடயங்களின் பிரகாரம் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டது .

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர், ஓய்வு பெற்ற நீதியரசர் ரோஹினி மாரசிங்க இந்த தகவலை வெளியிட்டுள்ளார்.

போராட்டக்காரர்கள்மீது தாக்குதல் நடத்தப்பட்ட விவகாரம், அவ்வேளையில் அரசியல் வாதிகளுடன் இருந்த தொடர்பு உட்பட மேலும் பல விடயங்கள் தொடர்பில் இதன் போது விசாரணை நடத்தப்படவுள்ளன.

தாக்குதலுக்கு இலக்கான தேசபந்து தென்னக்கோன், பொலிஸ் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகின்றார். எனவே, அவர் இன்று முன்னிலையாவாரா என்பது இன்னும் உறுதியாகவில்லை. (அ)

# மலேசியா சென்றாரா சந்திரகாந்தன் எம்.பி.?

கொழும்பு, மே 13

முன்னாள் இராஜாங்க அமைச்சர் பிள்ளையான் எனும் சிவநேசதுரை சந்திரகாந்தன் மலேசியாவுக்கு சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த விடயம் தொடர்பாக சிங்கள ஊடகமொன்று நேற்று வியாழக்கிழமை செய்தி வெளியிட்டுள்ளது.

அங்கிருந்து ஐரோப்பிய நாட்டுக்கு பயணம் மேற்கொள்ளவுள்ளதாகவும் அதன்படி, மூன்று ஐரோப்பிய நாடுகளில் உள்ள மக்களை அதற்கான வசதிகளை செய்து தருமாறும் அவர் கோரியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (அ)

# இலங்கைக்கான சகல பயணங்களையும் ஒத்திவைக்குமாறு சிங்கப்பூர் அறிவிப்பு

கொழும்பு, மே 13

இலங்கையில் மோதல்கள் வெடித்ததையடுத்து, இலங்கைக்கான அனைத்து அத்தியாவசியப் பயணங்களையும் ஒத்திவைக்குமாறு தமது நாட்டு பிரஜைகளுக்கு சிங்கப்பூர் அறிவுறுத்தியுள்ளது.

சிங்கப்பூர் வெளிவிவகார அமைச்சு நேற்று வியாழக்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

“இலங்கையில் இருக்கும் சிங்கப்பூரர்கள் விழிப்புடன் இருக்கவும், அவர்களின் தனிப்பட்ட பாதுகாப்பிற்காக தேவையான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் எடுக்கவும் கடுமையாக அறிவுறுத்தப்படுகிறார்கள்” என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் ஒரு பொருளாதார நெருக்கடி ஒரு மாதத்திற்கும் மேலாக அமைதியான ஆர்ப்பாட்டங்களுக்கு வழி வகுத்தது, ஆனால் இந்த வாரம் பொதுமக்களின் கோபம் வன்முறையாக வெடித்தது.

இது நாடு தழுவிய மோதல்களைத் தூண்டியது, குறைந்தது இரண்டு பொலிஸார் உட்பட ஒன்பது பேர் கொல்லப்பட்டனர். 200க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர், 136 வீடுகள் சேதமடைந்துள்ளன.

எதிர்ப்புகள் மற்றும் மக்கள் அதிகம் கூடும் பொது இடங்களைத் தவிர்க்குமாறு இலங்கையில் உள்ள சிங்கப்பூரர்கள் அறிவுறுத்தப்படுவதாக அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அவர்கள் செய்திகளை உன்னிப்பாகக் கண்காணித்து உள்ளூர் அதிகாரிகளின் அறிவுறுத்தல்களுக்கு செவிசாய்க்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பணிப்புறக்கணிப்பு தொடரும்

கொழும்பு, மே 13

காலிமுகத்திடலில் அமைதியான முறையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது தாக்குதல் நடத்தியமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆரம்பிக்கப்பட்ட பணிப்புறக்கணிப்புப் போராட்டம் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுவதாக இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

தொழிற்சங்க போராட்டம் கைவிடப்பட்டுள்ளதாக தொழிற்சங்க ஒன்றிய சம்மேளனம் நேற்று முன்தினம் அறிவித்தது.

எனினும் குறித்த தீர்மானத்தை எடுப்பதற்கு முன்னதாக அதன் பிரதிநிதிகள் தமது சங்கத்தினருடன் எவ்வித கலந்துரையாடல்களையும் முன்னெடுக்கவில்லை என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.

எனவே தமது சங்கத்தினால் முன்னெடுக்கப்படும் பணிப்புறக்கணிப்பு போராட் டம் தொடரும் என அவர் குறிப்பிட்டார். (அ)

# யாழ்.போதனா வைத்தியசாலையில் போன்களை திருடியவர் சிக்கினார்!

யாழ்ப்பாணம், மே 13

யாழ். போதனா மருத்துவமனையில் நீண்ட காலமாக அலைபேசிகளைத் திருடி வந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரிடமிருந்து பெறுமதி வாய்ந்த 9 அலைபேசிகள் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மானிப்பாய் சாவற்கட்டுப் பகுதியைச் சேர்ந்த 24 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ். போதனா மருத்துவமனையில் நீண்ட நாள்களாக ஊழியர்கள், நோயாளிகளின் அலைபேசிகள் திருட்டுப்போயிருந்தன.

கதைத்துவிட்டுத் தருவதாக தெரிவித்துவிட்டு அபகரித்துச் செல்வது, சார்ஜ் போடும் போது மற்றும் நோயாளிகள் மலசல கூடங்களுக்கு செல்லும் போது என அலைபேசிகள் திருடப்பட்ட சம்பவம் இடம் பெற்றன.

அவை தொடர்பில் பொலிஸில் முறைப்பாடுகள் செய்யப்பட்டன. யாழ்ப்பாணம் தலைமையக பொலிஸ் நிலைய குற்றத் தடுப்பு பொலிஸ் பிரிவினர் மேற் கொண்ட விசாரணையிலேயே ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். (அ-03)

# இலங்கைக்கான பயணத்தை மீள்பரிசீலனை செய்யுங்கள்!

## பயண ஆலோசனை வெளியிட்ட ஆஸி.

கொழும்பு, மே 13

இலங்கையின் தற்போதைய நெருக்கடி நிலைமை காரணமாக அவுஸ்திரேலியாவின் வெளிவிவகார மற்றும் வர்த்தக திணைக்களம் இலங்கைக்கான பயண ஆலோசனையை வெளியிட்டுள்ளது.

தற்போது இலங்கையில் நிலவும் பாதுகாப்பு நிலைமை காரணமாக, இலங்கைக்கான பயணத்தை மீள்பரிசீலனை செய்யுமாறு அவுஸ்திரேலியாவில் இருந்து வரும் பயணிகளுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில், அடுத்த மாதம் இலங்கையில் இரு நாடுகளுக்கும் இடையில் கிரிக்கெட் தொடர் இடம்பெறவுள்ள நிலையில், சுற்றுப்பயணத்துக்கு முன்னதாக இலங்கையில் நிலவும் அரசியல் பதற்றம் குறித்து அவுஸ்திரேலியா கிரிக்கெட் வீரர்களுக்கு விளக்கமளிக்கப்படவுள்ளதாகவும் அந்த திணைக்களம் தெரிவித்துள்ளது. (அ)

முள்ளிவாய்க்கால் வாரத்தையொட்டி

# மன்னாரில் மக்களுக்கு கஞ்சி வழங்கல்



மன்னார், மே. 13

மே-18 முள்ளிவாய்க்கால் வாரத்தையொட்டி நேற்று வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் மன்னார் பள்ளிமுனை பெருக்க மரத்தடி பகுதியில் மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப் பட்ட உறவுகளை தேடும் குடும்பங்களின் சங்கத்தின் ஏற்பாட்டில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.

மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவு களை தேடும் குடும்பங்களின் சங்கத்தின் தலைவி மனுவல் உதயச்சந்திரா தலைமையில் மன்னார் பள்ளிமுனை பெருக்க மரத்தடிப் பகுதியில் மே-18 முள்ளிவாய்க்கால் வாரத்தை யொட்டி முள்ளிவாய்க்கால் கஞ்சி காய்ச்சும் நடவடிக்கை இடம்பெற்றது.

அதனைத்தொடர்ந்து பள்ளிமுனை பங்குத்தந்தையின் பிரார்த்தனையை தொடர்ந்து அங்கு கூடி நின்றவர்களுக்கு வலிந்து காணாமல் ஆக்கப் பட்ட உறவுகளை தேடும் குடும்பங்களின் சங்க உறுப்பி னர்களினால் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்பட்டது.

(அ)

மே-18 நினைவேந்தல் வாரம் ஆரம்பம்

# தமிழின படுகொலை ஆவணங்கள் நல்லூரில் காட்சிப்படுத்தப்பட்டன!





யாழ்ப்பாணம், மே. 13

**முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தை முன்னிட்டு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் கடந்த காலங்களில் தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட இனவழிப்பு நடவடிக்கைகள் தொடர்பான தரவுகள் ஆவணமாக்கப்பட்டு தியாக தீபம் திலீபனின் நினைவாலயத்துக்கு முன்னால் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.**

தமிழினப் படுகொலையை குறிக்கும் மே-18 முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரம் நேற்றி லிருந்து ஆரம்பமாகியுள்ள நிலையில் முன்ன ணியினரால் குறித்த இன அழிப்பை ஆவணப் படுத்தி காட்சிப்படுத்தும் செயல் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் மற்றும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் மகளிர் அணித் தலைவி மற்றும் மக்கள் முன்னணியின் ஆதரவாளர்கள் கலந்து கொண்டனர்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஆவணக் காப்பகத்தின் ஏற்பாட்டில் குறித்த தமிழினப் படு கொலை நிகழ்வுகள் ஆவணங்கள் காட்சிப்ப டுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-03)

# ஜனாதிபதி செயலகத்துக்கு முன் இன்று தொழிற்சங்க போராட்டம்!

கோட்டாவை பதவி விலகுமாறு வலியுறுத்தி

கொழும்பு, மே. 13

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வை பதவி விலகுமாறு வலியுறுத்தி இன்று வெள்ளிக்கிழமை ஜனாதிபதி செயலகத்திற்கு முன்பாக மற்றுமொரு பாரிய தொழிற்சங்க நடவடிக்கை ஆரம்பிக்கப்படவுள்ளதாக தொழிற் சங்க ஒருங்கிணைப்பு நிலையத்தின் ஒருங்கிணைப்பாளர் வசந்த சமரசிங்க தெரிவித்தார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கடந்த திங்கட்கிழமை பதவியை இராஜினாமா செய்ததைத் தொடர்ந்து நாடு தழுவிய தொழிற்சங்க போராட்டம் நேற்று முன்தினம் கைவிடப்பட்டதாக அவர் ஊடகங்களுக்கு கூறினார்.

இந்த நிலையில், நேரத்தை வீணடிக் காமல் உடனடியாக பதவியை இராஜி னாமா செய்யுமாறு சமரசிங்க ஜனாதிப தியிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

நாட்டின் மறுசீரமைப்புச் செயற் பாடுகளைத் தொடங்குவதற்கு இந்நாட டில் உள்ள பல அரசியல் இயக்கங்கள் தமது வேலைத்திட்டங்களை முன்வைத் துள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார்.

எனவே, இன்று பிற்பகல் 2.00 மணிக்கு ஜனாதிபதி செயலகத்திற்கு முன்பாக மாபெரும் தொழிற்சங்கப் போராட்ட மொன்றை முன்னெடுக்க தீர்மானித்துள் ளோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

ஜனாதிபதி தனது பதவியை இரா ஜினாமா செய்து மௌனமாக இருக்கா விட்டால் இந்த பாரிய தொழிற்சங்க நடவடிக்கையை பாரிய மக்கள் போராட்டமாக மாற்றுவோம் எனவும் சமரசிங்க எச்சரித்துள்ளார். (அ)

# முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டனின் கால்நடைப் பண்ணைக்கு தீ வைப்பு!

கொழும்பு, மே. 13

முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவுக்குச் சொந்தமான தாக தெரிவிக்கப்படும் கால்நடைப் பண்ணை ஒன்று ஆர்ப்பாட்டக்காரர் களால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளதாக கொழும்பு செய்திகள் தெரிவித்தன.

மாத்தளை, லக்கல வஸ்கமுவ தேசிய பூங்காவுக்கு அருகில் உள்ள பண் ணைக்கே நேற்று முன் தினம் புதன் கிழமை இரவு தீ வைக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஆடுகள், பன்றிகள் மற்றும் முயல் களை விடுவித்த போராட்டக்காரர்கள் பின்னர் பண்ணைக்கு தீ வைத்து எரித் துள்ளதாகவும் பொலிஸார் கூறினர்.

பூங்காவின் எல்லையில் 15 ஏக்கர் பரப்பளவில் இந்த பண்ணை அமைந் துள்ளதாகவும் பல கட்டடங்கள் தீயில் எரிந்து நாசமாகியுள்ளன என்றும் கொழும்பு செய்திகள் மேலும் தெரி வித்தன. (அ)

# தாக்குதல்களில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு நாமல் அனுதாபம்

வன்முறையை நிறுத்துமாறு அழைப்பு



கொழும்பு, மே. 13

பயங்கரமான சூழ்நிலை யில் இந்த பயங்கரமான நேரத்தில் இறந்த அனைவரின் குடும்பத்தினருக்கும் அன்புக்குரியவர்களுக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்கள் என பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரி வித்துள்ளார்.

நேற்று அவர் வெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

குறித்த பதிவில், "பயங்கரமான சூழ்நிலையில் இந்த பயங்கரமான நேரத்தில் இறந்த அனைவரின் குடும்பத்தினருக்கும் அன்புக்குரியவர் களுக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்கள். குறிப்பாக, அமரகீர்த்தி அத்துகோரல. எல்லா வகையிலும் அவர் ஒரு நல்ல மனிதர். வன்முறையை நிறுத்துவோம்" என பதிவிட்டுள்ளார். (அ)

# அலுவலகம் தாக்கப்பட்டதாக வதந்தி பரப்புபவர்கள் மீது சட்ட நடவடிக்கை

முன்னாள் எம்.பி. சந்திரகுமார் தெரிவிப்பு

கிளிநொச்சி, மே. 13

கிளிநொச்சியில் உள்ள எனது அலுவ லகம் மற்றும் வாகனம் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது என உண்மைக்கு புறம்பான தகவல்களை பரப்பி வருவ தோடு, அவதூறுகளையும் சிலர் மேற் கொண்டு வருகின்றனர்.

எனவே இவர்கள் தொடர்பில்சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், சமத்துவக் கட்சியின் பொதுச் செயலாளருமான மு.சந்திரகுமார் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கிளிநொச்சி மாவட்டத்தில் தொடர்ச்சியாக அரசியல், மற்றும் மக்கள் பணியில் ஈடுபட்டு வருகின்றேன். எனது செயற்பாடுகள் எப்படியானது என்பதனை மக்கள் நன்குணர்ந்துள்ளனர். ஆனாலும் சில விசமிகள் குறுகிய அரசியல் இலாபங்களுக்காக மக்கள் மத்தியில் முற்றிலும் உண்மைக்கு புறம்பான தகவல்களை பரப்பி வருவதோடு, என் தொடர்பில் அவதூறு கருத்துக்களை வெளியிட்டும் வருகின்றனர்.

எனவே இது தொடர்பில் கட்சியின் ஆதரவாளர்கள் மற்றும் பொது மக்கள் குழப்பமடையத் தேவையில்லை, இவ் வாறானவர்கள் தொடர்பில் விரைந்து சட்ட நடவடிக்கை மேற்கொள்ளவுள் ளேன்.

தற்போது அரசியல் அதிகாரத்தில் இல்லை என்றாலும் கிளிநொச்சியில் எமக்கான மக்கள் ஆதரவு கடந்த காலத்தை விட அதிகரித்து வருகிறது. தனியொரு தரப்பாக நின்று மக்களுக் கான எமது பணியை மேற்கொண்டு வருகின்றோம். அவசரகாலச் சட்டம் உள் ளிட்ட மக்களை பாதிக்கின்ற நடவடிக் கைகளையும், மக்களுக்கு எதிரான நடவடிக்கைகளையும் எதிர்த்தும், கண்டித்தும் வந்திருகின்றோம். இதனை அண்மைய எமது ஊடக அறிக்கைகளில் காணலாம். ஆனால் இதனை யெல்லாம் அறிந்தும் தங்களுடைய குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக சிலர் மக்களை குழப்பி வருகின்றனர்- என்றார். (அ)




# உக்ரைன் போருக்கான தேவையென்ன?

- பாஸ்கர் செல்வராஜ்

போர் என்பது ஒரு நாடு மற்ற நாட்டின் ராணுவ எதிர்ப்பை அடக்கி அந்நாட்டை ஆக்கிரமித்து ஆள்வது என்பதுதான் பொதுவான புரிதல். ஆனால், போர் என்பது பொருளாதாரப் பலனை அரசியல் பலம், அழுத்தம் மற்றும் ஒடுக்குமுறையினூடாக அடைய முடியாதபோது ராணுவ பலத்தின் மூலம் அடைய எடுக்கப்படும் அரசியல் நடவடிக்கை. பொருளாதார நோக்கமற்ற போர் என்ற ஒன்று இந்த உலகில் நடந்ததாக வரலாறு இல்லை. அப்படி என்றால் இந்தப் போருக்கான நோக்கம் என்ன? ரஷ்யாவுக்கு ஐரோப்பிய எண்ணெய் - எரிவாயு சந்தையை தக்கவைத்து அதன்மூலம் ஈட்டும் வருமானத்தைத் தொடர்ந்து பெறுவதும் பெருக்குவதும் ஐரோப்பிய - அமெரிக்க நாடுகளுக்கு ரஷ்யாவின் எண்ணெய் - எரிவாயு இயற்கை வளத்தை நேரடியாகவோ, மறைமுகமாகவோ தங்களது கட்டுப்பாட்டில் கொண்டுவந்து இந்த வருமானத்தின் பெரும்பகுதியை தனதாக்கிக் கொள்வது என்பதும் உடனடி நோக்கம். இதன் நீட்சியாக நீண்டகால நோக்கில் மேற்குலகத்துக்கு தனது உலக மேலாண்மையைத் தொடர்ந்து நிலைநிறுத்துவது; ரஷ்யாவுக்கும் மற்றவர்களுக்கும் இந்த ஒற்றை ஆதிக்கத்தை உடைத்து தங்களின் ஆதிக்கப் பங்கைப் பெறுவது.

பனிப்போருக்குப் பிறகு ரஷ்யாவில் எல்ட்ஸின்கால "ஜனநாயக" மாற்றத்தின் மூலம் ரஷ்ய வளங்களைக் கைப்பற்றும் நோக்கம் எட்டப்பட்டாலும் புதின்கால எரிபொருள் தேசியமயமாக்கத்துக்குப் பிறகு அது மீண்டும் கைநழுவிப் போனது. அங்கே மீண்டும் "ஜனநாயக" மாற்றம் ஏற்பட பல மில்லியன் டாலர்களை அமெரிக்கா செலவுசெய்து வந்தது மட்டுமல்ல் அதன் அருகில் இருக்கும் ஜார்ஜியா, உக்ரைன் நாடுகளிலும் பில்லியன் கணக்கில் செலவுசெய்து "ஜனநாயக" வண்ணப் புரட்சிகள் ஏற்படுத்தப்பட்டன. 2014இல் ஏற்படுத்தப்பட்ட உக்ரைன் வண்ணப்புரட்சிக்கு ஐந்து பில்லியன் டாலர்கள் செலவு செய்யப்பட்டதாக செய்திகள் வெளியாகின. ரஷ்யாவில் நேரடி "ஜனநாயக" மாற்றத்தை ஏற்படுத்த முடியாததால் அந்நாட்டின் எரிவாயுக்குழாய் செல்லும் நாடுகளில் ரஷ்யாவுக்கு எதிரான "ஜனநாயக" ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தி அந்நாடுகளை ராணுவமயமாக்கி பொருளாதார மற்றும் ராணுவ ரீதியில் ரஷ்யாவைப் பணியவைக்கும் அரசியல் இது.

## ஆட்சி மாற்ற அரசியல்!

இதை ஐரோப்பிய சந்தை சார்பைக் குறைத்து சீன சந்தையை நோக்கி நகர்ந்தும், உக்ரைனைத் தவிர்த்த கடல்வழியாக ஜெர்மனிக்குச் செல்லும் நோர்டு ஸ்ட்ரீம் 2 மற்றும் துருக்கி வழியாக ஐரோப்பாவை அடையும் மாற்று எரிவாயுக்குழாய் திட்டங்களைச் செயல்படுத்தியும் பொருளாதார ரீதியாக ரஷ்யா எதிர்கொண்டது. ரஷ்ய எரிவாயுவை கத்தாரின் எரிவாயுவைக் கொண்டு பதிலீடு செய்ய ஏற்படுத்தப்பட்ட சிரிய உள்நாட்டுப் போர் மற்றும் சமீபத்திய பெலாரஸ், கஜகஸ்தான் நாடுகளின் ஆட்சி மாற்ற அரசியலை நேரடி அல்லது மறைமுக ராணுவ தலையீடுகளின் மூலம் ரஷ்யா எதிர்கொண்டு வந்தது. ரஷ்யாவின் நீளும் இந்தக் கரத்தை உடைக்க அமெ ரிக்கா அதன்மீது பொருளாதாரத்தடை விதித்தது. தனது பொருளாதார நடவடிக்கைகளில் இருந்து டாலரை நீக்கி ரஷ்யா பதிலடி கொடுத்து வந்தது.

முன்பு மந்தத்தை நோக்கிச் சென்ற உலகப் பொருளாதாரத்தை மீட்டெடுக்க மாற்று எரிபொருள் மற்றும் எண்ணெயில் இயங்கும் ஊர்திகளை மாற்றி மின்னூர்திகளைக் கொண்டுவந்து ஒரு ட்ரில்லியன் பெறுமான புதிய சந்தைத் தேவையை உருவாக்கி ஒரு புதிய பொருளாதாரச் சுழற்சியை ஏற்படுத்தும் திட்டத்தை ஜனநாயகக் கட்சி முன்மொழிந்தது. தெளிவாக எண்ணெய் கும்பலின் நலனை பலிகொடுக்கும் இந்த முன்னெடுப்பைத் தடுக்கும் முயற்சி அமெரிக்காவில் ஹில்லாரி - ட்ரம்ப் தேர்தல் மோதலாக வெடித்தது. இதில் ட்ரம்ப் வெற்றிபெற ஹில்லாரிக்கு எதிரான செய்திகளை ரஷ்யா கசியவிட்டு அதன் ஜனநாயக அரசியலில் தலையிட்டதாக குற்றம் சாட்டப்பட்டது.

ட்ரம்ப் வெற்றிக்குப்பின் ரஷ்யாவில் எண்ணெய் உற்பத்தியில் ஈடுபட்டிருக்கும் எக்ஸ்சான்மொபில் நிறுவன தலைவர் டில்லர்சனும் அவருக்குப் பிறகு எண்ணெய் குழுமத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்ட பொம்பேயேயும் அமெரிக்க வெளியுறவுத் துறை செயலராகப் பதவியேற்றார்கள். இப்படி இந்தப் போருக்கு முன்பு மாறிமாறி தங்களது பொருளாதார நலன்களை முன்னெடுக்கும் ஆட்சி மாற்ற அரசியல் விளையாட்டை இவர்கள் விளையாடி வந்தார்கள்.

## கொரோனா, டாலர், பணவீக்கம்

கொரோனா கால முடக்க சந்தை சரிவையும், மக்களின் வருமான இழப்பையும் ஆறு ட்ரில்லியனுக்கும் அதிகமான பணத்தை அச்சிட்டு அமெரிக்கா சமாளித்தது. இந்தப் பணமும் முடக்கத்தால் உருவான மின்னணு சாதனங்களுக்கான தேவையும் புதிய பொருளாதார சுழற்சியை முடுக்கிவிட்டது. எண்ணெய் கும்பலின் ஆட்சி முந்தைய மின்னூர்தி திட்டத்தை விடுத்து சீனாவு டன் பனிப்போர் இந்தியாவை சூரிய மின் னாற்றல் மற்றும் குறை மதிப்பு பொருள் உற்பத்தி மையமாக்கி அமெரிக்காவை மீண்டும் மிகைமதிப்பு பொருள் உற்பத்தி மையமாக மாற்றி அதை உலகம் முழுக்க டாலரில் சந்தைப்படுத்துவது என்ற மாற்றுத் திட்டத்தை முன்னெடுக்க முயன்றது. தேர்தலில் எண்ணெய் கும்பலை வீழ்த்தி ஆட்சியைப் பிடித்த உலகமய ஆதரவு ஜனநாயகக் கட்சி இந்தத் திட்டத்தை விடுத்து தங்களது பழைய மாற்று எரிபொருள், மின்னூர்தி திட்டத்தை முன்னுக்குக் கொண்டுவந்தது. மற்ற மகிழுந்து உற்பத்தியாளர்களுக்குக் கிடைக்காத சில்லுகள் மின்னூர்தியைத் தயாரிக்கும் டெஸ்லாவுக்கு தங்கு தடையின்றி கிடைத்து அதன் விற்பனைப் பெருகி எலான் மஸ்க் உலகப் பணக்காரர் ஆனார்.

பெருமளவில் பணத்தை அச் சிட்டு வட்டி விகிதத்தைக் குறைத்து பொருளாதாரத்தை முடுக்கிய இந்த முன்னெடுப்பு சந்தையில் தேவையைக் கூட்டி பொருளாதாரத்தை முடுக்கினாலும் பெரு பணமுதலைகள் தங்களிடம் குவித்து வைத்திருக்கும் செல்வமதிப்பைக் குறைக்கும் தன்மை கொண்டது. அதைத் தவிர்க்கவும் உருவாகி இருக்கும் புதிய சந்தை தேவையின் மூலம் செல்வத்தை மேலும் பெருக்கவும் உலகம் முழுவதும் உள்ள சொத்துகளை வாங்கச் சென்றார்கள். அது நிதிச்சந்தையில் பங்குகளின் விலையைக் கூட்ட அந்த மதிப்புயர்வுக்கேற்ப பங்குதாரர்களுக்கு வருமான விகிதத்தைக் கொடுக்க நிறுவனங்கள் பொருட்களின் விலையை உயர்த்த உலகெங்கும் பணவீக்கம். விழிப்புடன் இந்த டாலர் வெள்ளத்துக்கு அணை கட்டிய சீனா (1.5%) தப்பித்துக் கொண்டது் பட்டுக் கம்பளம் விரித்த இந்தியா (6.95%) மாட்டிக்கொண்டு விழிக்கிறது.




## டாலர் பணவீக்கம் உலகத்தின் பிரச்சினை!

இப்போது விலைவாசியைக் கட்டுப்படுத்த பொருட்களின் விலையைத் தீர்மானிக்கும் எரிபொருள், சிமெண்ட், உலோகங்கள் உள்ளிட்ட பொருட்களின் உற்பத்தியைக் கூட்டி அவற்றின் விலைகளை வீழச் செய்ய வேண்டும். பொருட்களின் மதிப்பையும் விலையையும் தெரிவிக்கும் டாலர்தான் அமெரிக்காவின் கையில் இருக்கிறதே ஒழிய இந்தப் பொருட்களின் உற்பத்தி மற்ற நாடுகளின் கைகளில்தான் இருக்கிறது. முற்றுருமையாளர்களின் கையில் இருக்கும் இந்தப் பொருட்களின் உற்பத்தியைப் பெருக்கி விலையை வீழச் செய்தால் அது முதலிட்ட பங்கு தாரர்களின் வருமான விகிதத் தைக் குறைத்து இந்த நிறுவனங்களின் பங்கு விலைகளை வீழச்செய்யும் என்பதால் அவர்கள் உற்பத்தியைப் பெருக்க மறுக்கிறார்கள்.

இதைத் தவிர்த்த இன்னொரு வழி சந்தையில் புழங்கும் டாலரின் அளவைக் குறைத்து வட்டி விகிதத்தை அதிகரித்து மிகை டாலரை சந்தையில் இருந்து நீக்கி அதன் மதிப்பை உயர்த்துவது. அதன் மூலம் பணத்தின் வாங்கும் திறனைக் கூட்டி உயர்ந்திருக்கும் பொருட்களின் விலைகளுக்கு ஈடான டாலராக மாற்றலாம். அது டாலர் மூலதனம் உற்பத்தியில் ஈடுபடுவதைக் குறைத்து தொழிற்துறை விரிவாக்கத்தைக் கெடுத்து வேலைவாய்ப்பின்மையை ஏற்படுத்தி தேக்க பணவீக்கத்தைக் கொண்டுவரும்.

இந்த இரண்டையும் தவிர்த்த இன்னொரு வழி எண்ணெய் வள நாடுகள் அல்லது பொருள் உற்பத்தி செய்யும் சீனாவை சந்தையில் டாலரை வாங்கச் செய்து அதன் மூலம் எழும் தேவையால் டாலரின் மதிப்பைக் கூட்டி புழக்கத்தில் இருக்கும் டாலரைக் குறைத்து பணவீக்கத்தை சமாளிக்கலாம். அதாவது மற்ற நாடுகள் அமெரிக்காவுக்குக் கொடுக்கும் கடனை மறைமுகமாக அதிக ரிப்பது. மற்ற நாடுகள் டாலர்களில் கடனைப் பெற்று தங்களின் தேவையைச் சமாளிப்பது வழக்கம். இவர்கள் டாலரை அதிகரித்துவிட்டு அதிகாரத் திமிரோடு கடன் கொடு என்கிறார்கள். ஏனென்றால் மற்ற நாடுகளில் பணப்புழக்கம் அதிகரித்து பணவீக்கம் ஏற்பட்டால் அது அந்த நாட்டின் பிரச்சினை. ஆனால், உலகப்பணமான டாலர் அதிகரித்து பணவீக்கம் ஏற்பட்டால் எல்லோரின் பிரச்சினை.

## கத்தியைக் காட்டி கடன் கேட்பது

உலகம் முழுக்க ஏற்கனவே புழக்கத்திலும், கையிருப்பாகவும் முப்பது ட்ரில்லியனுக்கும் அதிகமாக டாலர் இருக்கிறது. மேலும் கையிருப்பை அதிகரிக்க பேசலாம் என்று சவுதிக்கும், ஐக்கிய அரபு நாட்டுக்கும் பைடன் தொலைபேசினால் எண்ணெய் - எரிவாயு சந்தைக்கு போட்டிக்கு வந்து, ட்ரம்ப்கால ஆயுத ஒப்பந்தத்தைத் தடுத்து நிறுத்தி, ஏமன் போரில் இந்த நாடுகள் மீதான ஏவுகணை தாக்குதலிலும் கைவிட்ட கடுப்பில் அவர்கள் எடுப்பதே இல்லை.

[நாளை வரும்]

ஈழநாடு



# ராஜபக்ஷாக்களே இன்று வீசுவது “தேநீர் கோப்பை, சூறாவளி அல்ல”



வி.தேவராஜ்
(மூத்த ஊடகவியலாளர்)




தமிழ் முஸ்லிம் தலைமைகளால் ஏமாற்றப்பட்டு திசையறியாது இருக்கும் வடக்கு கிழக்கு மலையக முஸ்லிம் இளைஞர் யுவதிகளின் கண்களை இந்த “கோத்தா கோ கம’ கருத்தியல் கண் திறக்குமா?

கொழும்பு காலிமுகத்திடலில் ஜனாதிபதி செயலகத்திற்கு முன்பாக இளைஞர் யுவதிகளினால் ஆரம்பிக்கப்பட்ட அகிம்சை வழிப் போராட்டமானது 8 ஆம் திகதி மே மாதத்துடன் ஒரு மாதத்தை பூர்த்தி செய்தது.

இந்தப் போராட்டம் “சலசலப்புடன் கடந்து போய்விடும்” என்பதே அரசியல்வாதிகளின் எண்ணப் பாடாக போராட்டம் ஆரம்பித்ததில் இருந்தே கருக்கொண்டிருந்தது. இதுவும் இலகுவில் கடந்துபோய் விடும் என்பதில் குறிப்பாக அதீத நம்பிக்கை கொண்டவர்களாக ராஜபக்ஷ குடும்பமும் அவர்களுடன் இணைந்த அரசியல் கூட்டாளிகளும் இருந்தனர். மே 8 ஆம் திகதிவரை “இதுவும் இலகுவில் கடந்துபோய் விடும்” என்ற நிலைப்பாட்டில் மண் விழும் என மறுநாள் மே 9 ஆம் திகதி வரை அவர்கள் நினைத்துக் கூடப் பார்க்கவில்லை. எனவேதான் மே 9இல் விஷப் பரீட்சையில் இறங்கினர்.

**இந்தப் போராட்டம் “சலசலப்புடன் கடந்து போய்விடும்” என்பதே அரசியல்வாதிகளின் எண்ணப்பாடாக போராட்டம் ஆரம்பித்த தில் இருந்தே கருக் கொண்டிருந்தது. இதுவும் இலகுவில் கடந்துபோய் விடும் என்பதில் குறிப்பாக அதீத நம்பிக்கை கொண்டவர்களாக ராஜபக்ஷ குடும்பமும் அவர்களுடன் இணைந்த அரசியல் கூட்டாளிகளும் இருந்தனர்.**

அலரி மாளிகையில் மஹிந்த ராஜபக்ஷ தனது ஆதரவாளர்கள் சகிதம் கூட்டங்களை நடத்துவது ஒன்றும் புதிதில்லை. இன்றைய நெருக்கடி காலகட்டத்தில் குறிப்பாக ஜனாதிபதியும் பிரதமரும் பதவி விலகுவதுடன் ராஜபக்ஷ குடும்பமே அரசியலில் இருந்து விலக வேண்டும் கொள்ளையடித்த பணத்தை திருப்பி நாட்டுக்கே வழங்க வேண்டும் என ஜனாதிபதி செயலகத்தில் இருந்து ஒலித்த குரல்கள் நாடு முழுவதும் ஒலிக்கத் தொடங்கியதை அடுத்து அடிக்கடி தனது ஆதரவாளர்களைச் சந்திக்கத் தொடங்கினாரார். அதன் தொடர்ச்சியாகத்தான் மே 9ஆம் திகதியும் தனது ஆதரவாளர்களைச் சந்தித்தார்.

இந்தச் சந்திப்பு சற்று வித்தியாசமானதாக அமைந்தது. வழமைபோன்று பிரதமர் பதவியில் இருந்து மஹிந்த ராஜபக்ஷ அவர்களை விலக வேண்டாமென கோருவது மாத்திரமல்ல கூட்ட முடிவில் அலரி மாளிகையை விட்டு வெளியேறி பொலிஸாரினதும் இராணுவத்தினதும் ஒத்துழைப்புடன் ஜனாதிபதி செயலகத்திற்கு முன் 31 நாட்களாக இயங்கிவரும் “ கோட்டா கோ கமவை” துவம் செய்து துடைத்து அழித்து போராட்டத்திற்க முற்றுப்புள்ளி வைப்பது என்ற நிகழ்ச்சி நிரலும் இருந்தது. இதன் எதிரொலிதான் “கோட்டா கோ கம” மீது நடத்தப்பட்ட மிலேச்சத்தனமான தாக்குதல்களாகும்.



இந்தத் தாக்குதல்கள் பூமரங்காய் போன்று ராஜபக்ஷக்களையும் அவருடன் இணைந்த ஆளும் வர்க்கத்தினரையும் நாடு பூராவும் தாக்கத் தொடங்கியது.

ஜனாதிபதி செயலகத்திற்கு முன்பான “கோ கோட்டா கம” அலரி மாளிகைக்கு முன்பான “மைனா கம” மற்றும் நாடுபூராவும் உருவாகியுள்ள மேற்கூறிய அரசியல் சமூக வேறுபாடுகளுக்குப்பால் ஓரணியில் திரட்டியுள்ளனர். அதில் வெற்றியும் கண்டுள்ளனர்.

இந்த இளைஞர்களின் பின்னால் அணி திரள தென்னிலங்கை தயாராகி விட்டது.

ராஜபக்ஷாக்களினதும் அவர்கள் சார்ந்த அடிவருடிகளினதும் ஊழல் மோசடிகள் குறித்து பொது மக்களை சிந்திக்க வைத்தது மாத்திரமல்ல பொது வெளியிலும் பேச வைத்துள்ளனர்.


இன்று மக்கள் கூடும் பொது வெளி யிலும் பயணம் செய்யும் போதும் ஒரு வரை ஒருவர் தனிப்பட்ட ரீதியில் சந்திக்கும் போதும் ராஜபக்ஷ குடும்பம் அவர்களுடன் இணைந்த ஊழல் மோசடி கும்பல்கள் பற்றியும் நாட்டின் எதிர்காலம் குறித்தும் இந்த இளைஞர் குழாம் பேச வைத்துள்ளது.

குறுகிய ஒரு மாத காலத்திற்குள் மக்களின் சிந்தனையில் பாரிய மாற்றத்தைத் “கோ கோட்டா கம” போராட்டக்கள இளைஞர்களும் யுவதிகளும் உருவாக்கியுள்ளனர் என்பதை இங்கு பதிவு செய்தாக வேண்டும்.

ராஜபக்க்ஷ குடும்பத்திடம் இருந்து விடுதலை பெற்ற ஒரு நல்லாட்சியை உருவாக்க நினைத்த தென்னிலங்கை மக்கள் அரசியல்வாதிகளினால் தோற்கடிக்கப்பட்டனர்.

இந்தத் தோல்வி தந்த வலியுடன் இருந்தவர்களை உயிர்த்த ஞாயிறு படுகொலையுடன் சிங்கள மக்களின் உணர்வுகளுடன் விளையாடி கிராமங்கள் ராஜபக்ஷ குடும்ப மும் அவர்கள் சார்ந்த ஆளும் வர்க்கமும் நினைப்பது போல் “இதுவும் இலகுவில் கடந்து போய்விடும்” என்ற சாமான்ய விடயமல்ல என்பதை உணர்த்தி விட்டது.

இதனை வேறு வார்த்தையில் கூறுவதாயின் “கோ கோட்டா கமவின்” கருத்தியல் வெறுமனே “ தேநீர் கோப்பை சூறாவளி” அல்ல உண்மையான சூறாவளி என்பதை உணர்த்திவிட்டது. இந்த சூறாவளி மகிந்த ராஜபக்ஷவின் இராஜினாமாவுடன் மாத்திரமல்ல ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் இராஜினாமாவுடன் வீறு கொண்டெழுவதுடன் ஊழல்வாதிகளுக்கு சாவுமணி அடிக்கும் வரை ஓயப் போவதில்லை என்பது உண்மையாகும்.



உண்மையில் “கோட்டா கோ கம” இளைஞர் யுவதிகளைப் பாராட்டியாக வேண்டும். தம்மை நோக்கி குண்டர்கள் பொல்லுகளுடன் வரும் பொழுது “ திருப்பித் தாக்கமாட்டோம் “ எனக் கூறி இடி யென விழுந்த அடிகளை தாங்கி நின்றனர். இந்த மன உறுதியே நாட்டு மக்களை கிளர்ந்தெழ வைத்தது. இந்த மன உறுதி உள் நாட்டில் மாத்திரமல்ல வெளி உலகத்திலும் அவர்களை உயர்த்தியுள்ளது.

மக்களுக்காக மாற்றத்தை ஏற்படுத்த முயன்றவர்கள் இந்த இளைஞர் யுவதிகள்.

தென்னிலங்கையில் ஆயுதம் ஏந்திய பரம்பரை இன்று அகிம்ஷை வழியில் தென்னிலங்கையை நாட்டைப் பாதுகாப்பதாக ராஜபக்ஷாக்கள் மீண்டும் இலங்கை அரசியலில் உயிர்த்தெழுந்தனர். கடந்த இரண்டரை வருடங்களில் ராஜபக்ஷ குடும்பமும் அவர்கள் சார்ந்த ஆளும் வர்க்கமும் நடத்திய ஊழல் மோசடிகளினால் நாடு வங்குரோத்து நிலையை அடைந்தது.

ராஜபக்ஷாக்கள் இல்லாத ஊழல் மோசடிகள் அற்ற நாட்டை உருவாக்கவே இளைஞர் யுவதிகள் முயல்கின்றனர்.

தென்னிலங்கை குண்டர்களும் படைத்தரப்பும் தமிழர்களின் உயிர்களைப் பறித்ததையும் உடமைகளை நூலகத்தை எரித்ததையுமே நாம் பார்த்துள்ளோம். ஆனால் இன்று இனவாதிகளின் சொத்துக்கள் எரிக்கப்படுவதை முதன் முதலாகப் பார்க்கின்றோம்.

இதற்குப் பிறகும் இனவாதிகளும் ஊழல் மோசடிக்காரர்களும் தலை நிமிர்ந்து தென்னிலங்கை அரசியலில் இறங்க முன்வருவார்களா என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

தமிழ் முஸ்லிம் தலைமைகளால் ஏமாற்றப்பட்டு திசையறியாது இருக்கும் வடக்கு கிழக்கு மலையக முஸ்லிம் இளைஞர் யுவதிகளின் கண்களை இந்த “கோட்டா கோ கம’ கருத்தியல் கண் திறக்குமா?

# புலமைச் சிகரம் தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

கல்வி tv CHANNEL


● 1, 2 ஆகிய வினாக்களில் முதலில் தரப்பட்ட பகுதியைப் பூரணப்படுத்துவதற்குரிய மீதிப்பகுதியைத் தெரிவு செய்க.

01. வண்ணத்துப்பூச்சியின் ஒருபகுதி முன்னே தரப்பட்டுள்ளது.



(1) (2) (3)

02.



(1) (2) (3)

03. இங்குள்ள உருக்களில் காட்டப்பட்டுள்ள பிராணிகளை மூன்று கூட்டங்களாகப் பிரிக்கலாம்.



A B C D E F

இக் கூட்டங்களைச் சரியாகக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.

(1) A, C / D, E / B, F

(2) A, E / B, C / D, F

(3) C, F / B, D / A, E


04. "பல்கலைக்கழகம்" எனும் சொல்லிலுள்ள எழுத்துக்களைப் பயன்படுத்தி ஆக்கக் கூடிய சொற்களைக் கொண்ட விடைத் தொகுதி எது?

(1) பல், பழம், பகல், கழகம், காலை, கல், பாகல்
(2) பல், கல்வி, பகல், கழகம், கலை, கல், பக்கம்
(3) பல், பழம், பகல், கழகம், கலை, கல், பக்கம்

05. சந்திரன் தோன்றாத ஒரு நாளில் நள்ளிரவில் வீட்டிலிருந்து வெளியே வந்து வானத்தைப் பார்க்கும்போது தொலைவில் உள்ள வானில் பறந்து செல்லும் கிளிக் கூட்டத்தைக் காணலாம் எனக் காவியா கூறுகின்றாள். இது நடைபெற இயலாது இதற்குக் காரணம்

(1) இருளில் அத்தகைய ஒரு நிகழ்ச்சியைப் பார்க்க முடியாமை.
(2) இரவில் கிளிகள் பறந்து செல்ல வேண்டிய தேவை இல்லை.
(3) கிளிகள் கூட்டமாகப் பறந்து செல்லாமை.

06. உருக்கோலத்தில் அடுத்து வரவேண்டிய உருவைத் தெரிக.



(1) (2) (3)


07. உலக மரபுரிமை மையங்களாக ......................... நிறுவனத்தால் இலங்கையில் பாரம்பரிய இடங்கள் எனப் பிரகடனப்படுத்தப்பட்டன. அவற்றுள் பொலன்னறுவை புராதன நகரம், அனுராதபுரம் புனிதநகரம், சிகிரியா புராதன நகரம், .............................. போன்றவை சில இடங்களாகும்.

முதலாம் வெற்றிடத்திற்கும் இரண்டாம் வெற்றிடத்திற்கும் முறையே மிகப் பொருத்தமான சோடிச் சொற்களை தெரிவு செய்க.

(1) யுனிசெப், காலிக்கோட்டை
(2) யுனேஸ்கோ, யாழ்கோட்டை
(3) யுனெஸ்கோ, தங்கக்கோயில் (கோல்டன் டெம்பிள்)

## விடைகள்


01. (3) 

02. (1) 

03. (3) C, F / B, D / A, E

04. (3) பல், பழம், பகல், கழகம், கலை, கல், பக்கம்

05. (2) இரவில் கிளிகள் பறந்து செல்ல வேண்டிய தேவை இல்லை.

06. (2) 

07. (3) யுனெஸ்கோ, தங்கக்கோயில் (கோல்டன் டெம்பிள்)

---

கல்வி tv CHANNEL-1

**13.05.2022**
**வெள்ளிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | தமிழ் |
| 08.15 | தரம்-10 | வரலாறு |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | வரலாறு |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | தகவல் தொடர்பாடலும் தொழில்நுட்பமும் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | விவசாய விஞ்ஞானம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | மனைப்பொருளியல் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | வர்த்தகம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | சித்திரம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கலைப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் மறு ஒளிபரப்பு |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | வரலாறு |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | தகவல் தொடர்பாடலும் தொழில்நுட்பமும் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | விவசாய விஞ்ஞானம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | மனைப்பொருளியல் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | வர்த்தகம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | சித்திரம் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | வரலாறு |

கல்வி tv CHANNEL - 2

**13.05.2022**
**வெள்ளிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | பாட்டு |
| 08.15 | தரம்-01 | அழகியல் |
| 09.00 | தரம்-02 | English |
| 09.45 | தரம்-03 | அழகியல் |
| 10.30 | தரம்-03 | கணிதம் |
| 11.15 | தரம்-04 | English |
| 12.30 | தரம்-04 | கணிதம் |
| 01.15 | தரம்-05 | Singalam |
| 02.00 | தரம்-05 | கணிதம் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | பாட்டு |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | English |
| 06.00 | தரம்-03 | அழகியல் |
| 06.45 | தரம்-03 | கணிதம் |
| 07.30 | தரம்-04 | English |
| 08.15 | தரம்-04 | கணிதம் |
| 09.00 | தரம்-05 | Singalam |
| 09.45 | தரம்-05 | கணிதம் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | அழகியல் |
| 12.30 | தரம்-03 | கணிதம் |
| 01.15 | தரம்-04 | English |
| 02.00 | தரம்-04 | கணிதம் |
| 02.45 | தரம்-05 | Singalam |
| 03.30 | தரம்-05 | கணிதம் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# மட்டக்களப்பில் அபிவிருத்திகளை முன்னெடுக்க முடியாத நிலைமை!



## தடை போடுகின்றனர் சில அதிகாரிகள் மாநகரசபை முதல்வர் குற்றச்சாட்டு!

**மட்டக்களப்பு, மே. 13**

**நாட்டில் பொருளாதார நெருக்கடி சூழ்நிலை காணப்பட்டாலும் மட்டக்களப்பு மாநகரசபையில் உள்ள நிதியைக் கொண்டாவது அபிவிருத்தி செயற்பாடுகளை முன்னெடுக்க முடியாதவகையில் சில அதிகாரிகளின் செயற்பாடுகள் உள்ளதாக மட்டக்களப்பு மாநகரசபையின் முதல்வர் தி.சரவணபவன் தெரிவித்தார்.**

மட்டக்களப்பு மாநகரசபையின் 60ஆவது அமர்வு நேற்று காலை மட்டக்களப்பு மாநகர சபையின் முதல்வர் தி.சரவணபவன் தலைமையில் ஆரம்பமானது.

மாநகரசபையின் பிரதி முதல்வர் க.சத்தியசீலன், ஆணையாளர் மதிவண்ணன்,பிரதி ஆணையாளர் சிவராஜா ஆகியோரின் பங்குபற்றுதலுடனும் மாநகரசபை உறுப்பினர்களின் பிரசன்னத்துடனும் நேற்றைய சபை அமர்வு வழமையான சம்பிரதாயங்களுடன் ஆரம்பமானது. இதன்போது சபையை ஆரம்பித்து மாநகரசபை முதல்வர் தலைமையுரையை ஆற்றியதை தொடர்ந்து மாநகரசபை உறுப்பினர்கள் இதன்போது சில விடயங்களை சுட்டிக்காட்டியிருந்தனர்.

குறிப்பாக கடந்த காலத்தில் மட்டக்களப்பில் சடலம் எரிக்கும் இயந்திரம் பொருத்துவதற்கான அனுமதிகள் வழங்கப்பட்டிருந்தபோதிலும் அதனை நிறைவேற்ற நிர்வாகம் முயற்சி செய்வில்லையென்றும் தற்போதைய பொறியியலாளர் அது தொடர்பில் அக்கறையற்று செயற்படுவதாகவும் இங்கு குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன.

தொடர்ச்சியாக மக்களின் வாழ்வாதாரம் மற்றும் அபிவிருத்தி தொடர்பில் நிதிகள் ஒதுக்கீடுகள் செய்யப்படுகின்றபோதிலும் அவற்றினை நடைமுறைப்படுத்த உரிய அதிகாரிகள் நடவடிக்கையெடுக்காமை தொடர்பில் மக்களின் பிரதிநிதிகளிடமே கேள்வியெழுப்புவதாகவும் மாநகரசபையின் நிர்வாகத்தின் செயற்பாடுகள்தான் இவ்வாறான பின்னடைவுக்கு காரணம் என்பதை மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டிய நிலையுள்ளதாகவும் இங்கு கருத்து தெரிவித்த மாநகரசபை உறுப்பினர் து.மதன் தெரிவித்தார்.

மாநகரசபையின் செயற்பாடுகள் பின் தள்ளப்படுவதற்கு காரணமானவர்கள் தொடர்பில் முறையான விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதுடன் அவர்கள் கடமைகள் தவறும் பட்சத்தில் அவர்களுக்கு பதிலீடுகளாக வுள்ளவர்களைக் கொண்டு மாநகரசபையின் அபிவிருத்தி செயற்பாடுகளை முன்கொண்டு செல்லவேண்டும் என இங்கு கருத்து தெரிவித்த மாநகரசபை உறுப்பினர் ஜோர்ஜ் பிள்ளை தெரிவித்தார்.

இது தொடர்பில் பல்வேறு கருத்துகள் மாநகரசபை உறுப்பினர்களினால் முன்வைக்கப்பட்டதுடன் தொடர்ந்து மாநகரசபை அமர்வு முன்கொண்டு செல்லப்பட்டதுடன் பல்வேறு விடயங்கள் குறித்து ஆராயப்பட்டது. (அ)

# பொது இடங்களில் கழிவுகளை கொட்டுவோரை கண்டறிவோம்

அம்பாறை, மே. 13

கல்முனை மாநகர சபைக்குட்பட்ட நீர் நிலைகள் மற்றும் பொது இடங்களில் கழிவுகளைக் கொட்டி, சூழலை மாசுபடுத்தும் நபர்களைக் கைது செய்து, தண்டிப்பதற்கு பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்க முன்வர வேண்டுமென மாநகர சபை வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பாக நேற்று வெளியிட்டுள்ள விசேட அறிவித்தலில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

நாட்டின் அசாதாரண சூழ்நிலை காரணமாக அட்டாளைச்சேனை, பள்ளக்காடு பகுதியில் அமைந்துள்ள திண்மக்கழிவகற்றல் நிலையம் வழமை போன்று தொழிற்படாத காரணத்தால், பல்வேறு சவால்களுக்கு மத்தியில் நாம் மாற்று ஏற்பாடுகளை மேற்கொண்டு, திண்மக்கழிவகற்றல் சேவையை சவால்களுக்கு மத்தியில் முன்னெடுத்து வருகின்றோம்.

இந்நிலையில், சாய்ந்தமருது கரைவாகு பொலிவேரியன் வீட்டுத்திட்டத்தை சூழவுள்ள குளங்கள், கல்முனை கிரீன்பீல்ட் வீட்டுத் திட்டத்திற்கு பின்னாலுள்ள ஆற்றங்கரைப் பகுதிகள் மற்றும் தோணாப் பகுதிகள் உள்ளிட்ட நீர் நிலைகளில் ஆடு, மாடு மற்றும் கோழிக் கழிவுகளையும் இதர குப்பைகளையும் கொட்டி வருகின்றனர்.

மாநகர சபையின் வர்த்தக அனுமதிப் பத்திரம் பெற்ற கோழிக் கடைகளில் சேர்கின்ற கோழிக் கழிவுகள் தினமும் அதற்காக ஒதுக்கப்பட்டிருக்கின்ற பிரத்தியேக திண்மக்கழிவகற்றல் வாகனங்களில் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

அவ்வாறே மாநகர சபையின் வர்த்தக அனுமதிப் பத்திரம் பெற்ற மாட்டிறைச்சிக் கடைகளுக்கான மாடுகள், விலங்கறுமனைகளில் அறுக்கப்படுவதனால், அக்கழிவுகளும் முறையாக அகற்றப்பட்டு வருகின்றன.

ஆனால், அனுமதி பெறாமல் சட்டவிரோதமாக நடத்தப்படுகின்ற கோழிக் கடைகளினதும் தனி நபர்களினதும் கோழிக் கழிவுகளும் வீடுகளிலும் அங்கும் இங்குமாகவும் சட்டவிரோதமாக அறுக்கப்படும் ஆடு, மாடுகளின் கழிவுகளுமே மேற்படி நீர்நிலைகளில் கொட்டப்படுவதாக அறிய முடிகின்றது.

அத்துடன், வீடுகளில் அன்றாடம் சேர்கின்ற கழிவுகளையும் சிலர் பொறுமையில்லாமல் உடனுக்குடன் இவ்வாறான நீர்நிலைகளிலும் தெருக்களிலும் பொது இடங்களிலும் வீசி வருகின்றனர்.

இவ்வாறானவர்களுக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்” எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# காணாமற்போனோர் அலுவலகத்தின் விசாரணை தற்காலிக இடைநிறுத்தம்

மட்டக்களப்பு, மே. 13

காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான அலுவலகத்தினால் நேற்று முதல் நாளை சனிக்கிழமை வரை மட்டக்களப்பில் இடம்பெறவிருந்த விசாரணைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன.

அந்த அலுவலகத்தின் ஆணையாளர் டி. யோகராஜா இதனைத் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள மண்முனை வடக்கு, செங்கலடி, கிரான், வாழைச்சேனை, வாகரை, வவுணதீவு ஆகிய 6 பிரதேச செயலக பிரிவுகளில் இருந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான விசாரணைகள் இடம்பெறவிருந்தன.

நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை காரணமாக இந்த விசாரணை நடவடிக்கை முன்னெடுக்க முடியாததையிட்டு அதனை தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளதாக அவர் குறிப்பிட்டார். (அ)

# திருமலை வழமைக்கு!

திருமலை, மே. 13

நாட்டில் நடைமுறையில் இருந்த ஊரடங்கு சட்டம் நேற்று காலை 7 மணிமுதல் தளர்த்தப்பட்டதை அடுத்து திருகோணமலை மாவட்டத்தின் நிலைமைகள் வழமைக்கு திரும்பின.



சந்தைகள், பல்பொருள் அங்காடிகள், மத்திய மீன் சந்தை என்பன திறக்கப்பட்டு இருந்ததையும் பொதுமக்கள் பொருட்கொள்வனவில் மும்முரமாக ஈடுபட்டதையும் அவதானிக்க முடிந்தது.

இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பஸ்கள் எவையும் சேவையில் ஈடுபடவில்லை. தனியார் பஸ்கள் மாத்திரம் தூர பயணங்களுக்காக தயார் நிலையில் இருந்ததுடன் மேலும் உள்ளூர் பஸ் சேவைகள் வழமைபோல் இடம்பெற்றதையும் அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

திருகோணமலை அஞ்சல் அலுவலகம் மூடப்பட்டு இருந்ததையும் அரச திணைக்களங்கள் திறந்திருந்ததுடன் மட்டுப்படுத்தப்பட்ட சேவைகள் இடம்பெற்றதையும் காண முடிந்தது.

எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பொது மக்கள் எரிபொருள்களை பெற்றுக்கொள்ள நீண்ட வரிசைகளில் காத்திருந்தனர்.

வீதிகளில் குறிப்பாக முக்கிய சந்திகளில் இராணுவத்தினர் குவிக்கப்பட்டு இருந்தனர்.

திருகோணமலை கடற்படைத் தளத்துக்கு செல்லும் வீதிகளில் வீதி மறியல் போடப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு இருந்தது. (அ)

# ஏறாவூர் ஆடை தொழிற்சாலை மீதான தாக்குதலைக் கண்டித்துப் போராட்டம்



மட்டக்களப்பு, மே. 13

மட்டக்களப்பு - ஏறாவூரில் அமைந்துள்ள ஆடைத் தொழிற்சாலை ஒன்றின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலை கண்டித்து நேற்று போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

ஏறாவூரில் இயங்கி வந்த தொழிற்சாலைகள் தாக்கப்பட்டு சேதம் விளைவிக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து, தாக்குதல் நடத்தியவர்களுக்கு எதிராகவும், அவர்களை கைது செய்யும் படியும் வலியுறுத்தி தொழிற்சாலை ஊழியர்களால் நேற்று ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. (அ)

# கடலில் குளிக்கச் சென்ற மூன்று பேர் சடலமாக மீட்பு

மட்டக்களப்பு, மே. 13

மட்டக்களப்பு - வாகரை பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள கதிரவெளி கடலில் குளிக்கச் சென்ற நால்வரில் மூவர் உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளனர்.

காளி கோயில் வீதி கதிரவெளியை சேர்ந்த ஜீவானந்தம் விமல்ராஜ் (வயது 22), வைத்தியசாலை வீதியைச் சேர்ந்த புலேந்திரன் அனுஷ்காந் (வயது 23), புதூர் கதிரவெளியைச் சேர்ந்த தங்கவேல் சஜிதன் (வயது 26) ஆகிய மூன்று இளைஞர்களும் சடலமாக மீட்கப்பட்டுள்ளனர்.

உயிரிழந்த இளைஞர்களின் சடலம் கதிரவெளி வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன் வாகரை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)



## இஸ்ரேல் படைகளின் தாக்குதலில் அல் சீரா ஊடகவியலாளர் மரணம்!

காஸா, மே 13

பலஸ்தீனிய அமெரிக்கரான அல் ஜசீரா ஊடகவியலாளர் ஷிரீன் அபு அக்லே நேற்றுமுன்தினம் புதன் கிழமை மேற்குக் கரை நகரமான ஜெனினில் இஸ்ரேலிய இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

மேற்குக் கரையில் இஸ்ரேலிய இராணுவ நடவடிக்கைகள் குறித்த அறிக்கையிடல் பணியில் ஈடுபட்டிருந்தபோது அவர் சுடப்பட்டார்.

இஸ்ரேலியப் படைகளால் தலையில் சுடப்பட்ட அவர், சம்பவ இடத்திலேயே உயிரிழந்தாரென பலஸ்தீன சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அபு அக்லேவின் தயாரிப்பு உதவியாளரான ஊடகப் பணியாளர் அலி அல்-சமுதியும் சுடப்பட்ட நிலையில் படுகாயங்களுக்கு உள்ளாகி தற்போது சிகிச்சை பெற்று வருகிறார்.

அரபு உலகின் மிக முக்கியமான பத்திரிகையாளர்களில் ஒருவரான அபு அக்லே, இஸ்ரேலிய இராணுவத்தால் திட்டமிட்டே கொல்லப்பட்டாரென அல் ஜசீரா குற்றம் சாட்டியுள்ளது. மேலும், இந்த கொலையை கண்டித்துள்ள அல் ஜசீரா, இந்தப் படுகொலைக்கு இஸ்ரேல் பொறுப்புக் கூறலை உறுதி செய்யுமாறு சர்வதேச சமூகத்திற்கு அழைப்பு விடுத்துள்ளது.

ஊடகவியலாளர்களை குறிவைத்து திட்டமிட்டே இஸ்ரேலிய படைகள் சுட்டுக் கொன்றனர். இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் இடம்பெற்ற போது பலஸ்தீன போராளிகள் யாரும் சம்பவ இடத்தில் இருக்கவில்லை என சம்பவ இடத்தில் இருந்த சாட்சிகள் சர்வதேச ஊடகங்களிடம் தெரிவித்துள்ளனர்.

“இஸ்ரேல் இராணுவம் எங்களைக் குறிவைத்தே சுட்டது. இதிலேயே என்னுடன் இருந்த அபு அக்லே கொல்லப்பட்டார்” என துப்பாக்கியால் சுடப்பட்டு காயமடைந்த அல் ஜசீரா தயாரிப்பாளர் சமுதி கூறினார். அந்த இடத்தில் பலஸ்தீன துப்பாக்கிதாரி யாரும் இல்லை என அவரும் உறுதிப்படுத்தினார்.

ஆனால், பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்ட சந்தேக நபர்களை கைது செய்வதற்காக முன்னெடுக்கப்பட்ட விசேட இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டதாகவும் ஊடகவியலாளர் கொல்லப்பட்ட இடத்துக்கு அருகில் பலஸ்தீன ஆயுததாரிகள் மற்றும் இஸ்ரேலியப் படைகளுக்கு இடையே துப்பாக்கிச் சூடு இடம் பெற்றதாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

இந்தச் சண்டையின்போது பலஸ்தீன ஆயுததாரிகளின் தாக்குதலில் ஊடகவியலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கலாம். இது குறித்த விசாரணை இடம்பெற்று வருவதாக இஸ்ரேல் கூறியுள்ளது. (ஐ)

## வடகொரியாவில் முதல் நபருக்கு கொரோனா தொற்று உறுதியானது

பியோங்யாங், மே 13

வடகொரியாவில் முதல் கொரோனா தொற்று நேற்று உத்தியோகபூர்வமாக உறுதிப்படுத்தப்பட்டது. வட கொரிய அரச ஊடகமான கே. சி. என். ஏ. இதனை உறுதிப்படுத்தியது.

தொற்று நோயாளி ஒருவர் கண்டறியப்பட்டதை அடுத்து நாடு முழுவதும் அவசர நிலை அறிவிக்கப்பட்டு ஊரடங்கு கட்டுப்பாடுகளை நடைமுறைப்படுத்தி வட கொரிய தலைவர் கிம் ஜோங் உன் அறிவித்துள்ளார்.

வட கொரியா தலைநகர் பியோங்யாங்கில் ஒமைக்ரோன் உருத் திரிபு தொற்றால் பாதிக்கப்பட்ட ஒருவர் உறுதிப்படுத்தப்பட்டார். காய்ச்சல் உள்ளிட்ட அறிகுறிகள் தென்பட்ட நபர்களிடமிருந்து மே 8ஆம் திகதி சேகரிக்கப்பட்ட மாதிரிகளில் ஒருவருக்கு ஒமைக்ரோன் தொற்று உறுதியானதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது.

வட கொரியா இதற்கு முன்னர் எந்த கொரோனா வைரஸ் தொற்று பாதிப்பும் தங்கள் நாட்டில் பதிவாகவில்லை என தெரிவித்து வந்தது.

இந்நிலையில் அங்கு கொரோனா தீவிரமானால் அதிக பாதிப்பு ஏற்படலாம் என அஞ்சப்படுகிறது. நாட்டில் உள்ள மோசமான சுகாதாரக் கட்டமைப்பால் நெருக்கடியை சமாளிக்க முடியாது எனவும் எச்சரிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# ஹிட்லர், ஸ்ராலினைவிட புடின் மிக ஆபத்தானவர்!

## போலந்து பிரதமர் எச்சரிக்கை

வார்சோ, மே 13

அடால்ப் ஹிட்லர் அல்லது ஜோசப் ஸ்ராலினை விட விளாடிமிர் புடின் மிகவும் ஆபத்தானவர் என்று போலந்து பிரதமர் மேட்யூஸ் மொராவிக்கி எச்சரித்துள்ளார்.

ரஷ்ய ஜனாதிபதி புடினின் அரக்கத்தனமான ஆக்கிரமிப்பு சித்தாந்தத்தை அழிக்க வேண்டும். புடினின் ஆபத்தான சித்தாந்தம் அவர் வசமுள்ள கொடிய ஆயுதங்கள் ஆபத்தானவை. அத்துடன், தனது கொடூர சித்தாந்தத்தை நியாயப்படுத்தும் வகையில் ஊடகங்களை அவர் பயன்படுத்தி வருவதும் ஆபதானது என மேட்யூஸ் மொராவிக்கி கூறியுள்ளார்.



மிக நீண்ட காலத்திற்கு முன்பு, இரண்டாம் உலகப் போரின் தோற்றம் தொடர்பாக ரஷ்யாவுடன் போலந்து ஒரு தகவல் போரில் ஈடுபட்டது. அதில் நாங்கள் வென்றோம். ஆனால், புடின் தனது இலக்குகளை அடைந்தார். மில்லியன் கணக்கான போலி ஊடகத் தளங்கள் மூலம் புடின் தனது சித்தாந்தம் சரியானது என்ற மாயையை உருவாக்கினார் எனவும் அவர் குறிப்பிட்டார்.

உக்ரேனிய நகரங்களான புச்சா, இர்பின் மற்றும் மரியுபோல் தெருக்களில் புடினின் கொடூர தாக்குதல்களால் இப்போது அப்பாவி உக்ரேனியர்களின் இரத்த ஆறு ஓடுகிறது.

ஸ்ராலின் மற்றும் ஹிட்லரின் சர்வதிகார கொடூர சித்தாந்தங்களின் தொடர்ச்சியாக புடினின் நடவடிக்கை உள்ளது எனவும் போலந்து பிரதமர் தெரிவித்தார்.

உக்ரைனின் எல்லை நாடான போலந்து, ரஷ்யாவின் உக்ரைன் மீதான படையெடுப்பிற்கு எதிராக குரல் கொடுத்து வருகிறது. ரஷ்யா மீது கடுமையான தடைகளை போலந்து வலியுறுத்திவரும் அதே வேளை. உக்ரேனிய இராணுவத்திற்கு ஆதரவளிக்குமாறு உலகத் தலைவர்களை கோரி வருகிறது.

ரஷ்யாவின் ஆக்கிரமிப்பு யுத்தத்தை அடுத்து உக்ரேனிய நகரங்களில் இருந்து வெளியேறிய பல இலட்சம் உக்ரேனிய அகதிகளுக்கு போலந்து அடைக்கலம் அளித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)



## அமெரிக்காவில் தொற்றுக்கு 10 இலட்சம் பேர் உயிரிழப்பு!

வாஷிங்டன், மே 13

அமெரிக்காவில் கொரோனாவுக்கு பலியானவர்கள் எண்ணிக்கை 10 இலட்சம் என்ற மிக மோசமான மைல்கல்லை எட்டியுள்ளது.

கொரோனா தொற்று நோய் தொடங்கி சுமார் இரண்டு ஆண்டுகளில் உலகில் மிக அதிகளவான உயிரிழப்புகளை சந்தித்த நாடாக அமெரிக்கா உள்ளது.

கொரோனா தொற்று நோயின் அச்சுறுத்தல் தற்போது உலகெங்கும் ஓரளவுக்குக் குறைந்துவிட்டாலும் அமெரிக்காவில் மட்டும் இந்த நோய்க்கு 10 இலட்சம் பேர் உயிரிழந்தமை தொற்று நோயால் ஏற்பட்ட அதிர்ச்சியூட்டும் துக்கம் மற்றும் இழப்பை அப்பட்டமாக நினைவூட்டுகிறது.

327 அமெரிக்கர்களில் ஒருவர் என்ற அடிப்படையில் அமெரிக்காவில் கொரோனா மரணம் பதிவாகியுள்ளது. சான் பிரான்சிஸ்கோ அல்லது சியாட்டிலின் மொத்த மக்கள் தொகையைவிட கொரோனா மரணங்களின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது.

2020 - மார்ச் 11, அன்று உலக சுகாதார அமைப்பு கோவிட் தொற்று நோயை பெருந்தொற்றாக அறிவித்த நேரத்தில் அமெரிக்காவில் கொரோனாவுக்கு 36 பேர் பலியாகினர். அடுத்த மாதங்களில் கொடிய வைரஸ் வேகமாகப் பரவியது. நியூயோர்க் போன்ற மக்கள் தொகை அடர்த்தியான நகர்ப்புறங்களில் தொற்று அதிவேகமாகப் பரவியது.

அமெரிக்காவில், தொற்று நோயின் தாக்கம் தற்போது ஓரளவுக்குக் குறைந்துள்ள போதும், அது முடிந்துவிடவில்லை என தொற்று நோய் நிபுணர்கள் எச்சரித்துள்ளனர். நாங்கள் இன்னும் உலகளாவிய தொற்று நோயை அனுபவித்து வருகிறோம் என அமெரிக்க தொற்று நோய் நிபுணர் மருத்துவர் அந்தோனி பாசி சமீபத்தில் எச்சரித்தார். (ஐ)

## அமேசன் காடுகளின் அழிப்பு ஏப்ரலில் இரு மடங்காக உயர்வு

பிரேசிலியா, மே 13

அமேசன் மழைக் காடுகளில் ஏப்ரல் மாதத்தில் மட்டும் சுமார் ஒரு இலட்சத்து 40 ஆயிரம் உதைபந்தாட்ட மைதானங்களுக்கு சமமான காட்டு பகுதிகள் அழிக்கப்பட்டன என்று தகவல்கள் வெளியாகி உள்ளன.

ஏப்ரல் மாதத்தில் மழைக் காலம் என்பதால் அமேசனில் அந்த மாதங்களில் மரங்களை வெட்டுவது குறைவாகத்தான் இருக்கும். எனினும், கடந்த ஆண்டை ஒப்பிடுகையில் ஏப்ரல் மாதத்தில் அமேசனில் இரு மடங்கு மரங்கள் வெட்டப்பட்டுள்ளன. பிரேசில் ஜனாதிபதியான ஜெய்ர் போல்சனோரா ஆட்சிக்கு வந்தது முதலே பிரேசிலில் காடழிப்பு தீவிரப்படுத்தப்பட்டு வருகிறது.

அவர் பதவி ஏற்றதுமுதல் அங்கு காடழிப்பு என்பது சுமார் 75வீதமாக அதிகரித்துள்ளது. உலகின் மிகப் பெரிய வெப்பமண்டல மழைக்காடுகள் சுமார் ஆயிரம் சதுர கிலோமீற்றர் பரப்பளவு அழிக்கப்பட்டுள்ளது சூழலியல் ஆர்வலர்கள் மற்றும் விஞ்ஞானிகளை கவலையடையச் செய்துள்ளது.

2022 ஆம் ஆண்டு தொடக்கத்திலே சூழலியல் ஆர்வலர்கள் பிரேசிலில் நடக்கும் காடழிப்பு குறித்து எச்சரிக்கை விடுத்திருந்தனர்.

பிரேசில் ஜனாதிபதி ஜெய்ர் போல்சோனரோ கடந்த முப்பது ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு நாட்டின் பொருளாதார நலனுக்காக பிரேசிலில் மழைக்காடுகள் அழிவதை தீவிரப்படுத்தி வருகிறார். இதற்கு எதிராக பிரேசில் பூர்வ பழங்குடிகள் போராட்டம் நடத்தி வருகின்றனர். போராட்டம் நடத்தும் பூர்வகுடிகள் மீது வன்முறைகள் கட்டவிழ்த்துப்பட்டன. இதனாலும், ஜெய்ர் போல்சோனரோ பெரும் விமர்சனத்துக்கு உள்ளானார்.

பூமியின் நிலப்பரப்பில் வெறும் 6 சதவீதத்தை மட்டுமே கொண்டுள்ள அமேசன் காடு, பூவுலகின் தாவரங்கள், உயிரின வகைகளில் பாதியைக் கொண்டுள்ளது. உலகின் நுரையீரல் என்று சிறப்பு பெயரராலும் அழைக்கப்படுகின்றது. (ஐ)





# நடப்பு தொடரிலிருந்து விலகினார் ஜடேஜா!

மும்பை, மே 13

நடப்பு ஐ. பி. எல். தொடரில் மீதமுள்ள போட்டிகளிலிருந்து சென்னை அணியின் ரவீந்திர ஜடேஜா விலகியுள்ளார். காயம் காரணமாக அவர் விலகினார் என்று அணி நிர்வாகம் அறிவித்துள்ளது.

33 வயதான ஜடேஜா கடந்த 2012 முதல் சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்காக விளையாடி வருகிறார். இடையில் 2016 மற்றும் 2017 தொடர்களில் குஜராத் லயன்ஸ் அணிக்காக விளையாடியிருந்தார். 2008 மற்றும் 2009 தொடர்களில் ராஜஸ்தான் அணிக்காக அவர் விளையாடினார். 2011இல் கொச்சி அணிக்காக விளையாடினார். சகலதுறை வீரரான அவர் மொத்தம் 210 ஐ. பி. எல். போட்டிகளில் விளையாடி உள்ளார். 2502 ஓட்டங்களும், 132 விக்கெட்களும், 88 பிடிகளும் எடுத்துள்ளார்.

நடப்பு தொடரில் சென்னை அணியின் தலைவராக நியமிக்கப்பட்டார். 16 கோடி ரூபாய்க்கு அவரை தக்கவைத்தது சென்னை அணி. தலைவராக அவரின் செயல்பாடு கொஞ்சம் மோசமாகவே இருந்தது. மேலும், துடுப்பாட்டம் பந்துவீச்சு, களத்தடுப்பு என அனைத்திலும் அவர் தடுமாறினார்.



வெற்றி பெற முடியாமல் சென்னை தவித்தது. இதைத் தொடர்ந்து டோனி மீண்டும் அணியின் பொறுப்பை ஏற்றார். இந்நிலையில், காயம் காரணமாக அவர் தொடரிலிருந்து விலகியுள்ளார். (ஐ)

# ராஜஸ்தானை வீழ்த்தியது டில்லி கப்பிட்டல்ஸ் அணி!

மும்பை, மே 13

ராஜஸ்தான் றோயல்ஸ் அணியை 8 விக்கெட்களால் வீழ்த்தியது டில்லி கப்பிட்டல்ஸ் அணி.

மும்பையில் நேற்றுமுன்தினம் நடந்த 38ஆவது போட்டியில் ராஜஸ்தான் றோயல்ஸ், டில்லி கப்பிட்டல்ஸ் அணிகள் களமிறங்கின.

இந்த வெற்றியின் மூலம் டில்லி அணியும் ஐ. பி. எல். இறுதிச் சுற்றுக்கான போட்டி வாய்ப்பில் தன்னைத் தக்க வைத்துள்ளது. இறுதிச் சுற்று போட்டிக்கு குஜராத் ரைட்டன்ஸ் அணி முதல் அணியாக தகுதி பெற்றுள்ளது.

இந்நிலையில், அடுத்துள்ள இடங்களுக்கு லக்னோ (16 புள்ளிகள்), ராஜஸ்தான் (14 புள்ளிகள்), பெங்களூர் (14 புள்ளிகள்), டில்லி கப்பிட்டல்ஸ் (12 புள்ளிகள்), ஹைதராபாத் (10 புள்ளிகள்) என போட்டிக்களத்தில் தற்போது உள்ளன.

முன்னதாக நாணயச்சுழற்சியில் வென்ற டில்லி அணி களத்தடுப்பைத் தெரிவு செய்தது. இதனால், முதலில் ஆடிய ராஜஸ்தான் அணி டில்லிக்கு 161 ஓட்டங்களை இலக்காக நிர்ணயித்தது.

இந்த இலக்கை விரட்டிய டில்லி கப்பிட்டல்ஸ் அணிக்கு டேவிட் வோர்ணர், மிற்செல் மார்ஷ் இணை அபாரமான இணைப்பாட்டத்தை வெளிப்படுத்தியது. இந்த இணை 2ஆவது விக்கெட்டுக்காக 144 ஓட்டங்களைப் தம்மிடையே பகிர்ந்தது.

இதில், மிற்செல் மார்ஷ் 7 சிக்ஸர்கள், 5 பௌண்ட்ரிகளுடன் 89 ஓட்டங்களைக் குவித்தார். டேவிட் வோர்ணர் 52 ஓட்டங்களுடனும் அணித் தலைவர் ரிஷப் பன்ட் 13 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காதிருந்தனர்.

முன்னதாக, முதலில் ஆடிய ராஜஸ்தான் றோயல்ஸ் 20 ஓவர்களில் 6 விக்கெட்களை இழந்து 160 ஓட்டங்களைப் பெற்றது.

ஆரம்ப வீரர்களான ஜோஸ் பட்லர் (7), யஷஸ்வி ஜய்ஸ்வால் (1) ஆகிய இருவரும் குறைந்த ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர்.

ஆனால், ரவிச்சந்திரன் அஷ்வின் 38 பந்துகளில் 4 பௌண்ட்ரிகள், 2 சிக்ஸர்களுடன் 50 ஓட்டங்களையும் தேவ்தத் படிக்கல் 30 பந்துகளில் 6 பௌண்ட்ரிகள், 2 சிக்ஸர்களுடன் 48 ஓட்டங்களையும் பெற்று அணியைப் பலப்படுத்தினர்.

அவர்கள் இருவரும் 3ஆவது விக்கெட்டில் 53 ஓட்டங்களைப் பகிர்ந்தனர்.

மத்திய வரிசையில் ரஸி வான் டேர் டுசென் மாத்திரமே ஓரளவு பொறுமையாக ஆடி, ஆட்டமிழக்காமல் 12 ஓட்டங்களைப் பெற்றார்.

பந்துவீச்சில் சேத்தன் சக்காரியா 23 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் மிச்செல் மார்ஷ் 25 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் அன்ரிச் நொக்யா 39 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

# இத்தாலி ஓப்பன் ரென்னிஸ் சிமோனா அதிர்ச்சி தோல்வி!

ரோம், மே 13

இத்தாலியன் ஓப்பன் ரென்னிஸ் தொடரில் பிரிட்டனின் பிரபல வீராங்கனைகளான சிமோனா ஹாலேப் அதிர்ச்சி தோல்வியடைந்து வெளியேறினார்.

இத்தாலியன் ஓப்பன் ரென்னிஸ் தொடர் கடந்த 7ஆம் திகதி இத்தாலியின் ரோமில் ஆரம்பமானது.

இந்தத் தொடரில் நேற்று நடந்த இரண்டாவது சுற்றுப் போட்டியில் ருமேனியாவின் சிமோனா ஹாலேப் அமெரிக்காவின் கொலிஸை எதிர்கொண்டார்.

இந்தப் போட்டியில், கொலின்ஸ் 7-6 (7-1), 6-3 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றார்.

மற்றைய போட்டிகளில், பெலாரஸின் பெலாரஸின் சபலென்கா 6-1, 6-2 என்ற கணக்கில் அமெரிக்காவின் பெகுலாவை வெற்றி கொண்டார். (ஐ)





# உலகில் அதிக வருமானமீட்டும் முதல் வீரராக லயனல் மெஸ்ஸி!

நியூயோர்க், மே 13

உலகளவில் விளையாட்டு துறையில் அதிக வருமானம் ஈட்டி வரும் டாப் 10 விளையாட்டு வீரர்களின் பட்டியலை வெளியிட்டுள்ளது போர்ப்ஸ் பத்திரிகை.

இந்தப் பட்டியிலில் உதைபந்தாட்ட உலகின் ஜாம்பவானான ஆர்ஜென்ரீனாவின் மெஸ்ஸி ஆண்டுக்கு 13 கோடி டொலர்களை - நம் நாட்டு மதிப்பில் 4,800 கோடி ரூபாய் வருமானமீட்டி முதலிடத்தைப் பிடித்துள்ளார்.

அமெரிக்காவின் கூடைப்பந்தாட்ட வீரரான லெப்ரான் ஜேம்ஸ் 12.1 கோடி டொலர்களை வருமானமாக ஈட்டி இரண்டாவது இடத்திலும், உதைபந்தாட்ட உலகின் மற்றொரு ஜாம்பவான் வீரரான போர்த்துக்கல்லின் கிறிஸ்டியானோ றொனால்டோ11.5 கோடி டொலர்களை வருமானமாக ஈட்டி மூன்றாவது இடத்திலும் நீடிக்கின்றனர்.

விளையாடும் அணியின் ஒப்பந்தத் தொகை, விளம்பர தூதுவராக செயல்படுதல் போன்றவை மூலமாக அவர்கள் இந்த வருமானத்தை ஈட்டுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# வன்முறைச் சம்பவம் தொடர்பான விசாரணைக்கு முழு ஒத்துழைப்பு!

## நாமல் ராஜபக்ஷ அறிவிப்பு

கொழும்பு, மே 13

கொழும்பு - காலிமுகத்திடலில் கடந்த 9 ஆம் திகதி திங்கட்கிழமை இடம்பெற்ற துரதிர்ஷ்டவசமான நிகழ்வுகள் தொடர்பாக நடைபெறும் எந்தவொரு விசாரணைக்கும் தனிப்பட்ட முறையில் எனது முழு ஒத்துழைப்பையும் வழங்குவேன் என முன்னாள் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

எனது தந்தைக்கோ அல்லது எனக்கோ நாட்டை விட்டு வெளியேறும் எண்ணம் இல்லை. தொடர்ந்து நான் இங்கேயே இருப்பேன் எனவும் நாமல் கூறியுள்ளார்.

காலிமுகத்திடலில் ஒரு மாதத்துக்கு மேலாக அமைதியான முறையில் போராடி வந்த போராட்டக்காரர்கள் மீது மஹிந்த ராஜபக்ஷ ஆதரவாளர்கள் கடந்த 9 ஆம் திகதி தாக்குதல் நடத்தினர்.



இதனையடுத்தே நாடெங்கும் வன்முறை வெடித்தது. நாடெங்கும் ஆளும் கட்சி ஆதரவாளர்கள் இலக்குவைத்து தாக்கப்பட்டதுடன், அவர்களது சொத்துக்களும் சேதமாக்கப்பட்டன.

இந்நிலையில் காலிமுகத்திடல் போராட்டக்காரர்களின் தாக்குதலின் பின்னணியில் மஹிந்த ராஜபக்ச, நாமல் உள்ளிட்டவர்கள் உள்ளதாக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

அலரி மாளிகை முன்பாக ஆர்ப்பாட்டத்தில் அமைதியான முறையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டன் பின்னணியில் இருந்ததாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ள மஹிந்த, நாமல் உள்ளிட்டோர் வெளிநாடு செல்ல தடை விதிக்கக்கோரி பாதிக்கப்பட்ட தரப்பினர் மற்றும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் கோட்டை நீதவான் நீதிமன்றில் மனு தாக்கல் செய் திருந்தது.

இந்த மனுவை விசாரித்த கோட்டை நீதிவான், மனுவில் பெயர் குறிப்பிடப்பட்ட மஹிந்த, நாமல் உள்ளிட்ட 17 பேர் வெளிநாடு செல்லத் தடை விதித்து நேற்று உத்தரவிட்டார்.

இவ்வாறான நிலையிலேயே கொழும்பு - காலிமுகத்திடலில் கடந்த 9 ஆம் திகதி திங்கட்கிழமை இடம்பெற்ற துரதிர்ஷ்டவசமான நிகழ்வுகள் தொடர்பாக நடைபெறும் எந்தவொரு விசாரணைக்கும் தனிப்பட்ட முறையில் எனது முழு ஒத்துழைப்பையும் வழங்குவேன் என முன்னாள் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அத்துடன், எனது தந்தைக்கோ அல்லது எனக்கோ நாட்டை விட்டு வெளியேறும் எண்ணம் இல்லை. தொடர்ந்து நான் இங்கேயே இருப்பேன் எனவும் நாமல் கூறியுள்ளார். (அ)

## மரண அறிவித்தல்

தோற்றம்
28 - 11 - 1946



மறைவு
08 - 05 - 2022

### அன்ரனிராஜா சின்னப்பு

வயாவிளான் வட மூலையைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸ் Bonneuil sur Marne ஐ வசிப்பிடமாகவும் கொண்ட அன்ரனிராஜா சின்னப்பு அவர்கள் 08.05.2022 ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான சின்னப்பு ஞானம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சீனித்தம்பி ரேவதி தம்பதிகளின் அன்பு மருமகனும்,விக்கினேஸ்வரி(மீரா) அவர்களின் அன்புக் கணவரும்,நிலக்ஷி, சுலக்ஷி ஆகியோரின் பாசமிகு தந்தையும், லவன் அவர்களின் அன்பு மாமனாரும், மரியநாயகம் (பிரான்ஸ்), அலோசியஸ்(கொழும்பு), மங்களநாயகம் (பிரான்ஸ்), மேரி ஜசிந்தா(லண்டன்), அமலராணி(யாழ்ப்பாணம்), நேசராணி(பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும்,காமினி, வசந்தாதேவி, சரோஜாதேவி, காலஞ்சென்ற சிவம், மரியநாயகம், கருணாகரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும்,நிர்மலா, ரஞ்சனாதேவி, நிகுந்தலா, வத்சலா, கிரிதரன், கலிதரன், பாலதரன், பகீதரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

**திருப்பலி**
Tuesday, 17 May 2022 9:30 AM - 10:30 AM
Diocese De Créteil 2 Rue Pasteur Vallery Radot 1er étage, 94000 Créteil, France

**நல்லடக்கம்**
Tuesday, 17 May 2022 11:00 AM
Inter-communal cemetery Valenton 15 Av. de la Font Saint-Martin, 94460 Valenton, France

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

அன்னாரின் திருவுடலை பார்வையிட குடும்பத்தினரை தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
**லவன் - மருமகன்** Mobile : +33769023646
**லக்ஷி - மகள்** Mobile : +33651763249
**மீரா - மனைவி** Mobile : +33768134453

தகவல் :
**லவன் (மருமகன்).**

## இனி 5 மணி நேரம் மின் தடை?

கொழும்பு, மே 13

இன்று காலை 6 மணியுடன் ஊரடங்கு தளர்த்தப்பட்டால் மின் வெட்டு நடைமுறைப் படுத்தப்படும் நேரம் 05 மணித்தியாலங்களாக அதிகரிக்கும் என்று பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இன்றும், நாளையும் சுழற்சி முறையில் மூன்று மணி 20 நிமிடங்களுக்கு மின் துண்டிப்பு மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இருந்தபோதிலும், இன்று காலை 6 மணியுடன் ஊரடங்கு தளர்த்தப்பட்டால் மின் வெட்டு நடைமுறைப்படுத்தப் படும் நேரம் 05 மணித்தியாலங்களாக அதிகரிக்கும் என்று பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (அ)

## ஆறு மாவட்டங்களுக்கு மண் சரிவு எச்சரிக்கை!

கொழும்பு, மே 13

சீரற்ற காலநிலை காரணமாக ஆறு மாவட்டங்களுக்கு இன்று மாலை 4 மணி முதல் 24 மணித்தியாலங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

களுத்துறை, கண்டி, கேகாலை, மாத்தறை, நுவரெலியா மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களுக்கே இவ்வாறு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## 2022/2021 கல்வியாண்டுக்குரிய பல்கலைக்கழக அனுமதிக்கான நேர்முகத்தேர்வு ஒத்திவைப்பு!

கொழும்பு, மே 13

பாடநெறிசாரா நடவடிக்கைகளில் தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கான 2022/2021 கல்வியாண்டுக்குரிய பல்கலைக்கழக அனுமதிக்கான நேர்முகத்தேர்வு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இன்று வெள்ளிக்கிழமை குறித்த நேர்முகத்தேர்வுகளை நடத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது.

எனினும், நாட்டின் தற்போதைய சூழ்நிலை காரணமாக அதனை ஒத்திவைக்க தீர்மானித்துள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்தார்.


## ரணில் விக்ரமசிங்கவுக்கு 153 எம்.பிக்கள் ஆதரவு?

கொழும்பு, மே 13

ரணில் பிரதமராக பதவியேற்ற பின்னர் அவருக்கான பெரும்பான்மையை நிரூபிக்க 153 பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவு அளிக்க உள்ளனர் என்று சிங்கள இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டு உள்ளது. இந்த தகவலை எதிர்க்கட்சியின் மூத்த உறுப்பினர் தெரிவித்ததாக அந்த இணையத்தளம் மேலும் தெரிவித்துள்ளது. (அ)

## மரண அறிவித்தல்

தோற்றம்
23 - 06 - 1940



மறைவு
09 - 05 - 2022

### சின்னத்துரை செபஸ்தியாம்பிள்ளை (நவரட்ணம்)

அச்சுவேலி புனித சூசையப்பர் ஆலயபங்கைப் பிறப்பிடமாகவும், கனடா Markham, பிரான்ஸ் Garges les gonesse ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட சின்னத்துரை செபஸ்தியாம்பிள்ளை அவர்கள் 09.05.2022 திங்கட்கிழமை அன்று பிரான்ஸில் காலமானார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை அலங்காரம்மா தம்பதிகளின் அன்புப் புதல்வரும், காலஞ்சென்றவர்களான யோசேப் இராசமணி தம்பதிகளின் அன்பு மருமகனும்,அஞ்சலா அவர்களின் அன்புக் கணவரும், றமணி (பிரான்ஸ்), றஜனி (கனடா), றஞ்சித் (கனடா), றோணாட்(கனடா), றஜித்(சேவியர்- பிரான்ஸ்), றஜிதா(சூட்டி- பிரான்ஸ்), றகு(குயின்ரஸ்- பிரான்ஸ்), ஆகியோரின் அன்புத் தந்தையும், லிங்கம்(பிரான்ஸ்), காலஞ்சென்ற டோமினிக்(கனடா), வசந்தி (கனடா), சுபா(பிரான்ஸ்), ராஜ்குமார்(பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான இராஜரட்ணம்(பீற்றர்), மாசிலாமணி, யேசுதாசன்(சிங்கம்), அமுதம், வினிபிறட், நேசராசா(துரை), செல்வரட்ணம், பேபி(பிரான்ஸ்), இராசாத்தி(இலங்கை), டெய்சி (இலங்கை) ஆகியோரின்அன்புச்சகோதரரும்,காலஞ்சென்றவர்களான டெனிசியஸ், செல்லத்துரை, தங்கமணி, கந்தையா, பேசி, செல்வநாயகம், ஜெயமணி(பிரான்ஸ்), ராணி(இலங்கை), சவுந்தரநாயகம் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும்,காலஞ்சென்றவர்களான பாலசிங்கம், துரைசிங்கம், வீரசிங்கம், ராசசிங்கம், ரட்ணசிங்கம், பூமணி(கனடா), ஜெயமணி(பிரான்ஸ்), றுக்மணி(ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனரும், கதிர் (இலங்கை), லீலாவதி (இலங்கை), காலஞ்சென்றவர்களான இராஜரட்ணம், ராணி, துரைசிங்கம், சீலன் ஆகியோரின் அன்புச் சகலனும்,நிமலதாஸ் சுபோ, எமில்ஸ்தன், நிலோ, வேஜினி, றாஜன் மெலானி, றொய்சன், சாலினி, செபான், ஆன்சா, லூக்சிகா, ஜெசிக்கா, ஜெசோன், கரின் ஜெறோசன், றாஜன் ஆகியோரின் பாசமிகு பேரனும்,மத்தியாஸ், மலோறி, றொபின், எவான் ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதி நிகழ்வுகள் பற்றிய விபரம் பின்னர் அறியத்தரப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:
**றஜனி - மகள்** Mobile : +16478536916
**றஞ்சித் - மகன்** Mobile : +14377793282
**சேவியர் - மகன்** Mobile : +33699217070
**சூட்டி - மகள்** Mobile : +33663665565
**குயின்ரஸ் - மகன்** Mobile : +33624310165

தகவல் :
**சேவியர் - மகன.**

## பிரதமராக...

நாட்டில் ஏற்பட்ட நெருக்கடி நிலைமைகளைத் தொடர்ந்து பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கடந்த திங்கட்கிழமை பதவி விலகினார். இதைத் தொடர்ந்தே ரணில் விக்கிரமசிங்க பிரதமராக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ளார். நேற்று முன்தினம் ஜனாதிபதிக்கும் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலை தொடர்ந்தே இந்த நியமனம் நடைபெற்றதாகத் தெரிய வருகின்றது.

கடந்த பாராளுமன்றத் தேர்தலில், ரணில் தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஒரேயொரு பாராளுமன்ற உறுப்புரிமையே தேசியப் பட்டியல் மூலம் கிடைத்தது. இந்நிலையில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றில் அரசாங்கத்தை அமைப்பதற்கு தேவையான பெரும்பான்மையை நிரூபிப்பதற்கான ஏற்பாடுகள் நிறைவடைந்துள்ளன என்று அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன. அத்துடன், அடுத்த வாரத்துக்குள் புதிய அமைச்சரவை பதவியேற்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

ஆறாவது தடவையாகப் பதவியேற்றுள்ள ரணில் விக்கிரமசிங்க, முன்னதாக, 1993 - 1994 காலப் பகுதியில் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸ படுகொலையானமையைத் தொடர்ந்து முதல் தடவையாகப் பிரதமராகப் பதவி வகித்தார். பின்னர், 2001 -2004 ஆம் ஆண்டு காலப்பகுதியிலும், 2015 - 2018 ஒக்ரோபர் வரையிலும் பிரதமராகப் பதவி வகித்தார். இந்தக் காலப் பகுதியில் அப்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை பிரதமர் பதவியிலிருந்து நீக்கி, மஹிந்த ராஜபக்ஷவை பிரதமராக நியமித்தார்.

மஹிந்தவின் பதவிப் பிரமாணம் செல்லுபடியாகதது என்று உயர் நீதிமன்ற தீர்ப்பையடுத்து 2018 டிசம்பரில் மீண்டும் பிரதமராக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றார். 2019 நவம்பரில் நடந்த தேர்தலைத் தொடர்ந்து அவர் பதவியை இராஜிநாமா செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## கோட்டா...

குறிப்பிட்டார்.

பொன்சேகாவுக்கு பிரதமர் பதவி வழங்கப்படவுள்ளது எனவும், இது சம்பந்தமாக ஜனாதிபதியுடன் பேச்சு நடத்தப்பட்டுள்ளது எனவும் தகவல் வெளியாகியிருந்தது. அந்த தகவலையும் அவர் நிராகரித்தார்.

இது குறித்து அவர் தெரிவிக்கையில்-

பொய்ப் பிரசாரங்கள் மூலம் பொது மக்களை தவறாக வழிநடத்தும் முயற்சிகளை வன்மையாகக் கண்டிப்பதோடு, அமைதியான, வன்முறையற்ற சிவில் போராட்டத்தின் மூலம் முழு இலங்கை தேசத்தின் முக்கிய கோரிக்கைகளுடன் நிபந்தனையின்றி நிற்க வேண்டும்.

காலி முகத்திடல் போராட்டக்காரர்களுடன் கலந்தாலோசிக்காமல் நெருக்கடியை தீர்க்காது அதில் பங்காளியாக இருக்கப்போவதில்லை.

பொய்ப் பிரசாரங்கள் மூலம் மக்களை தவறாக வழிநடத்தும் எந்தவொரு முயற்சியையும் நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். அரச தலைவராக கோட்டாபய ராஜபக்ஷவின் அரசாங்கத்தில் எந்தப் பதவியையும் ஏற்க நான் திட்டவட்டமாக மறுக்கிறேன்-என்றார். (அ)

## ரணிலுக்குப்...

தற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எடுத்த முடிவு குறித்து நேற்று கொழும்பில் செய்தியாளர்களைச் சந்தித்துப் பேசிய பேராயர் கடும் அதிருப்தி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ரணில் விக்கிரமசிங்க ஒரு பாராளுமன்ற உறுப்பிர் மட்டுமே. அவர் பாராளுமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபிக்கவில்லை.

எனவே, அவர் பிரதமராக நியமிக்கக் கட்டால் அது சட்டபூர்வமானதாக அமையாது. தற்போது இந்த நாட்டில் உள்ள மக்கள் விரும்பும் தீர்வு இதுவல்ல. அரசியலில் தோற்கடிக்கப்பட்ட மற்றும் மக்களால் நிராகரிக்கப்பட்ட ஒரு நபரை அல்ல, மரியாதைக்குரிய நேர்மையான நபரையே மக்கள் விரும்புகிறார்கள்.

அனைத்து மக்களின் நம்பிக்கையைப் பெறக்கூடிய ஒரு நபரை மக்கள் விரும்புகிறார்கள்.

மகாநாயக்க தேரர்கள் கட்சி சார்பற்ற நபரை பிரதமர் பரிந்துரைக்கின்றனர். அந்த பரிந்துரை என்ன ஆனது? என்பதே அனைவரின் கேள்வியாக உள்ளது.

தற்போதைய நெருக்கடியிலிருந்து நம்பிக்கையுடன் எதிர்காலத்தை நோக்கி முன்னேறுவது அவசியம் என்பதை மீண்டும் வலியுறுத்த விரும்புகிறோம்.

கட்டமைப்பு ரீதியான முழுமையான மாற்றம் தேவை. தற்போதைய பாராளுமன்றக் கட்சிகளின் தலைவர்கள் மூலம் இதனை செய்ய முடியாது. இந்த நாட்டின் அனைத்து பிரஜைகளின் நம்பிக்கையை வென்றெடுக்கக்கூடிய ஒரு பக்கச் சார்பற்ற நபரால் மட்டுமே இது நிகழ முடியும்.

ரணில் விக்கிரமசிங்கவை பிரதமராக நியமிக்கும் முடிவை ஜனாதிபதி கைவிட வேண்டும் - என்றார். (அ)

## ஜனாதிபதி...

அபேவர்த்தன தலைமையில் நேற்று பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் நடைபெற்ற கட்சித் தலைவர்களின் கூட்டம் நடை பெற்றது. இதில் பங்கேற்ற பின்னர் ஊட கங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

கட்சித் தலைவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணை தயாரிக்கப்பட்டு ஜனாதிபதியிடம் கையளிக்கப்படும் என்றும் இதன்போது சபாநாயகர் கூறினார் என்று சுமந்திரன் எம். பி. தெரிவித்தார்.

நிலையான அரசாங்கத்தை அமைத்தல், பாராளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பு உள்ளிட்ட யோசனைகளும் இதன்போது ஜனாதிபதியிடம் கையளிக்கப்படவுள்ளன. நாடு முன்னோக்கி செல்ல நிலையான அரசாங்கம் அவசியம், ஜனாதிபதி பதவி விலகுவதற்கு குறிப்பிட்ட கால அவகாசம் வழங்கப்பட வேண்டும். இதனிடையே பிரதமரை நியமிக்க விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார்.

இதேவேளை, "எவரும் திடீரென தலையிட்டு பிரதமர் பதவியை ஏற்கக்கூடாது. மக்கள் மீண்டும் மீண்டும் ஜனாதிபதியை பதவி விலகுமாறு வலியுறுத்தும் கோரிக்கையை அவர் மதிக்க வேண்டும் என்று மனோகணேசன் எம். பி. தெரிவித்துள்ளார். (ஐ)

## ஆட்சி...

அனுப்பிவைத்தார் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ.

ஜனாதிபதி பதவி விலகினால்தான், பிரதமர் பதவியை ஏற்பேன் என அடம்பிடித்துவந்த சஜித், தற்போது அந்த நிலைப்பாட்டில் தளர்வை மேற்கொண்டுள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் சிலர், ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து இடைக்கால அரசை அமைப்பதற்கு முயற்சி மேற்கொண்ட நிலையிலேயே, சஜித் தரப்பு, இறுதி நேரத்தில் இந்த திடீர் நகர்வை மேற்கொண்டுள்ளது.

சஜித் தரப்பின் நான்கு நிபந்தனைகள்: -

1. குறுகிய காலப்பகுதிக்குள் பதவி விலக ஜனாதிபதி இணங்க வேண்டும்.

2.இரு வாரங்களுக்குள் 19 ஆவது திருத்தச்சட்டம் மீள அமுலாக வேண்டும்.

3. நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

4. மக்களின் வாழ்வு இயல்பு நிலைக்கு திரும்பிய பின்னர், மேற்படி அரசமைப்பு திருத்தங்கள் அமுலானதும், நிலையான அரசாங்கமொன்றை ஸ்தாபிக்க பொதுத் தேர்தல் நடத்தப்பட வேண்டும். (அ)

# மஹிந்தவுக்கும் ரணிலுக்கும் எவ்வித வேறுபாடும் இல்லை

## ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு

கொழும்பு, மே. 13

முன்னாள் பிரதமர்களான ரணில் விக்ரமசிங்கவிற்கும் மஹிந்த ராஜபக்சவிற்கும் இடையில் வேறுபாடு இல்லை என ஐக்கிய மக்கள் சக்தி குற்றம் சுமத்தியுள்ளது.

ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றிய ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்தும பண்டார, ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியுடன் பாரியளவில் தொடர்பு கொண்டுள்ளதாக குற்றம் சுமத்தினார்.

ரணில் விக்கிரமசிங்கவுக்கும் முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கும் இடையில் வேறுபாடு இல்லை என அவர் தெரிவித்தார்.

புதிய அரசாங்கத்தை அமைப்பதில் ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர்களின் ஈடுபாடு தொடர்பில் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலலித்த பாராளுமன்ற உறுப்பினர் மத்தும பண்டார, கட்சியின் எந்தவொரு உறுப்பினருக்கும் அவர் விரும்பியதைச் செய்வதற்கு ஜனநாயக உரிமை உண்டு என்றார்.

எவ்வாறாயினும், வதந்திகள் இருந்த போதிலும், எந்தவொரு ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினரும் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி பாராளுமன்ற உறுப்பினர்களுடன் அரசாங்கத்தை அமைக்க விரும்பவில்லை என அவர் தெரிவித்திருந்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டாரவின் 20 பாராளுமன்ற உறுப்பினர்கள் ஐக்கிய தேசியக் கட்சியில் இணையத் தயார் என தெரிவித்தமை தொடர்பில் ஊடகவியலாளர் ஒருவர் வினவியபோது, அது பழைய செய்தி என அவர் மறுத்துள்ளார்.

புதிய அமைச்சரவையை ஸ்தாபிப்பதில் ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எவரும் ஈடுபடமாட்டார்கள் என தாம் நம்புவதாக பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார். (அ)

## கோட்டா கோ கம...

எண்ணிக்கை தொடர்பில் இதுவரை எந்தத் தீர்மானமும் எடுக்கப்படவில்லை. பாராளுமன்றில் விரைவில் பெரும்பான்மையை நிரூபிப்போம் என்றும் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். (ஐ)

## ராஜபக்ஷக்களின்...

கோட்டாபய ரணிலை நம்புகிறார். இவர்கள் இருவரும் சேர்ந்து செய்யும் சதிகளை இந்த நாட்டின் எந்த குடிமகனும் ஏற்றுக்கொள்ளமாட்டான் எனவும் அனுரா குமார குறிப்பிட்டார்.

நாட்டில் தற்போது நிலவும் அரசியல் நெருக்கடி நிலை குறித்து ஆராய்வதற்காக வண.ஓமல்பே சோபித தேரர் உள்ளிட்ட முன்னணி பௌத்த மதகுருமார் மற்றும் ஜே.வி.பி. தலைவர்கள் இடையிலான சந்திப்பு பத்தரமுல்ல பெலவத்தையில் உள்ள ஜே.வி.பி தலைமை அலுவலகத்தில் நேற்று இடம்பெற்றது.

இதன் பின்னர் செய்தியாளர்களைச் சந்தித்துப் பேசும்போதே அனுராகுமார மேற்கண்டவாறு தெரிவித்தார். (அ)

## சஜித்தின்...

போது, அவர் முன்னர் பதவியை ஏற்க மறுத்ததால், தொடரும் அரசியல் ஸ்திரமின்மை காரணமாக, பாராளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலம் வாய்ந்த ஒருவரை நியமிக்கத் தீர்மானிக்கப்பட்டதாக, ஜனாதிபதி அவரிடம் தெரிவித்ததாக ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் உறுதிப்படுத்தியுள்ளன. (அ)

## மஹிந்த...

நடத்தப்பட்டமை தொடர்பில் பாதிக்கப்பட்ட தரப்பினர் மற்றும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தாக்கல் செய்த மனுவை விசாரித்த கோட்டை நீதவான் இந்த உத்தரவை பிறப்பித்தார்.

முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, முன்னாள் அமைச்சர்களான ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, பவித்ரா வன்னியாராச்சி, ரோஹித அபேகுணவர்தன, சி. பி.ரத்நாயக்க, நாமல் ராஜபக்ஷ மற்றும் சனத் நிஷாந்த ஆகியோருக்கே இவ்வாறு பயணத்தடை விதிக்கப்பட்டுள்ளது.

மேலும், மேல் மாகாணத்திற்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ் அதிபர் தேசபந்து தென்னக்கோனுக்கும் வெளிநாடு செல்வதற்கு நீதிமன்றம் தடை விதித்துள்ளது. (அ)

## ஊரடங்கு...

தெரிவித்துள்ளது.

எனினும், பிற்பகல் 2 மணி முதல் மீண்டும் ஊரடங்கு உத்தரவு நடைமுறைப் படுத்தப்பட்டு சனிக்கிழமை காலை 6 மணி வரை தொடர்ந்து நடைமுறையில் இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

## ரணிலுக்கு...

நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு 11 பாராளுமன்ற உறுப்பினர்கள் சந்தித்து கலந்துரையாடினர்.

நாடு எதிர்நோக்கும் பாரிய நெருக்கடியை போக்க தொலைநோக்கு பார்வை கொண்ட தலைவர் தேவை என்று பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்துள்ளதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன என்று அந்த ஊடகத்தின் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## பதவியேற்று...

ரணில் விக்ரமசிங்க பதவியேற்று ஒரு சில நிமி டங்களிலேயே மஹிந்த ராஜபக்ஷ புதிய பிரத மருக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

நாட்டில் ஏற் பட்டுள்ள அரசியல் நெருக்கடி காரண மாக கடந்த 9ஆம் திகதி பிரதமர் பத வியை மஹிந்த ராஜபக்ஷ இராஜினாமா செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

## நெருக்கடிகளை...

வொன்றை வெளியிட்டு இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜலி சங் இதனைத் தெரிவித்துள்ளார்.

பிரதமராக ரணிலின் நியமனம், மற்றும் சர்வகட்சி அரசை விரைவாக உருவாக்குவது ஆகியவை நெருக்கடியை எதிர்கொள்வதற்கும் ஸ்திரத்தன்மையை மேம்படுத்துவதற்கும் முதல் படிகளாகும். அனைத்து இலங்கையர்களின் தேவைகளையும் பூர்த்தி செய்யும் நீண்ட கால தீர்வுகளில் அர்த்தமுள்ள முன்னேற்றத்தை நாங்கள் ஊக்குவிக்கிறோம் என அவர் அதில் குறிப்பிட்டுள்ளார். (அ)

## பிரதமராக ரணில்...

மைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் கூறுகையில்,

ஜனாதிபதி சட்டபூர்வ தன்மையை முற்றாக இழந்துவிட்டார். அவர் வீட்டுக்குச் செல்ல வேண்டும் என்றே மக்கள் விரும்புகிறார்கள். ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆரம்பத்திலிருந்தே பாராளுமன்றத்தில் சட்டபூர்வதன்மை இல்லை. அவர் தனது தொகுதியில்கூட வெற்றி பெறவில்லை என்று சுமந்திரன் எம். பி. இந்தியாவின் தி இந்து ஆங்கில நாளிதழுக்கு தெரிவித்துள்ளார். (ஐ)

ஈழநாடு
Eelanadu




# சிங்கள பௌத்த பேரினவாதம் இன்று பலவீனமடைந்துள்ளது

## தமிழர் ஒன்றுபடவேண்டிய காலம் இது என்கிறார் கஜேந்திரன் எம்.பி.

யாழ்ப்பாணம், மே 13

**சிங்கள பௌத்த பேரினவாதம் பலவீனம் அடைந்துள்ளது. தமிழ் மக்கள் தற்போது ஒன்றுபட வேண்டிய காலம் என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தெரிவித்தார்.**

தியாக தீபம் திலீபனின் நினைவு ஆலயத்துக்கு முன்னால் இனப்படுகொலைகளை ஆவணப்படுத்தி காட்சிப்படுத்தலை ஆரம்பித்த பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

விடுதலைப் பயணத்தில் உயிர் நீத்த ஆன்மாக்கள் மாவீரர்களின் தியாகங்கள் வீண் போகவில்லை என்பது இன்று தென்னிலங்கையில் நடைபெறுகின்ற சம்பவங்களின் மூலம் நம்பிக்கை கொள்ளக் கூடியதாகவுள்ளது.

எங்கள் மீது இனப்படுகொலை செய்து அந்த ராஜபக்ஷ சொந்த மக்களாலேயே துரோகி என்றும் கள்ளன் என்றும் கொலைகாரன் துரோகி என்றும் தூற்றப்பட்ட பதவியில் இருந்து விரட்டி அடிக்கப்பட்ட சம்பவம் கண்முன்னே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

கோட்டாபய ராஜபக்ஷவும் விரைவிலேயே வீட்டுக்கு செல்ல வேண்டும் என்பதே எமது விருப்பம்.

அவர் வீட்டுக்குச் செல்வது மட்டுமல்ல அவர் மேற்கொண்ட இனப்படுகொலைக்காக சர்வதேச சட்டங்களின் முன் நிறுத்தப்பட்டு அவர் தண்டிக்கப்படவேண்டும் என்பது தமிழ்மக்களின் எதிர்பார்ப்பாக இருக்கின்றது.

அந்த வகையில் தமிழ் மக்கள் ஒன்றுபட வேண்டிய காலம் சிங்கள பௌத்த பேரினவாதம் பலவீனமடைந்திருக்கின்றது தங்களுக்குள் மோதிக் கொண்டு இருக்கிறார்கள்.

இந்த சந்தர்ப்பத்தில் தமிழ் மக்கள் இந்த ஒற்றையாட்சிக்குட்பட்ட 13ஆவது திருத்தச் சட்டத்தின் பிடியில் இருந்து வெளிவந்து ஒற்றையாட்சியை நிராகரித்து ஒரு தீர்வுக்காக ஒன்றுபட்டு தமிழ்த் தலைமைகள், இந்தியாவின் கூலிகளாக இருக்கின்ற தமிழ்த் தலைமைகள் இந்தியாவுக்காக 13ஆவது திருத்தச்சட்டத்தை முன்னெடுக் காது கைவிட்டு ஒதுங்கவேண்டும்.

தமிழ் மக்கள் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் கரத்தைப் பலப்படுத்தி சர்வதேச நீதியினைப் பெற்றுக் கொள்வதற்கும் தமிழ் மக்களின் தீர்வினைப் பெற்றுக் கொள்வதற்கும் அனைவரும் ஓரணியில் திரள வேண்டும்-என்றார். (அ)



## ஐக்கிய தேசிய கட்சி ஆதரவாளர்கள் யாழ். நகரில் வெற்றி கொண்டாட்டம்!

யாழ்ப்பாணம், மே 13

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர்கள் யாழ்ப்பாண நகரில் வெற்றிக் கொண்டாட்டங்களில் ஈடுபட்டனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று வியாழக்கிழமை மாலை 6.30 மணிக்கு இலங்கையின் புதிய பிரதமராக பதவிப் பிரமாணம் செய்துகொண்டார்.

இதனையடுத்து யாழ். நகரின் பிரதான வீதிகளில் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர்கள் பட்டாசுகளை கொளுத்தி மகிழ்ச்சியை பரிமாறிக்கொண்டனர். (அ)

## வவுனியாவிலும் நேற்று முள்ளிவாய்க்கால் கஞ்சி



வவுனியா, மே 13

முள்ளிவாய்க்கால் நினைவு வாரம் நேற்றுமுதல் அனுஷ்டிக்கப்பட்டு வரும் நிலையில் நேற்று வவுனியா மாவட்டத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களினால் கஞ்சி வழங்கும் நிகழ்வு இடம்பெற்றிருந்தது.

வவுனியா இலுப்பையடியில் இடம்பெற்ற நிகழ்வில் முள்ளிவாய்க்கால் பேரவலம் இடம்பெற்றதனை நினைவு கூர்ந்து இச்செயற்பாட்டை முன்னெடுத்ததாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் தெரிவித்தனர்.வீதியால் சென்ற பொது மக்களுக்கும் கஞ்சி வழங்கி வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## நான் கட்சியைவிட்டு வெளியேறவில்லை!

### ஹரீன் எம்.பி. அதிரடி அறிவிப்பு



கொழும்பு, மே 13

நாடு முகங்கொடுத்திருக்கும் பொருளாதார நெருக்கடி நிலைமைகளுக்கு மத்தியில் சஜித் பிரேமதாஸவோ அல்லது அநுரகுமார திசாநாயக்கவோ பிரதமர் பதவியைப் பொறுப்பேற்று நாட்டை நிர்வகிக்கவேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹரீன் பெர்ணான்டோ தெரிவித்தார்.

காணொளி ஒன்றை வெளியிட்டு அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இதனை ஐக்கிய மக்கள் சக்தி செய்யவில்லை என்றால் மாத்திரமே நான் சுயாதீனமாக இயங்குவேன் எனவும் அவர் குறிப்பிட்டார்.

தான் தெரிவித்த கருத்து சமூக ஊடகங்களில் திரிபுபடுத்தப்பட்டுள்ளதாகவும் ஹரீன் எம்.பி. இதன்போது சுட்டிக்காட்டியுள்ளார்.

சவாலை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதையே நான் சஜித்துக்கு கூறுகிறேன். அடுத்த பொதுத்தேர்தலில் போட்டியிடுவதற்குப் புத்திஜீவிகள் ஒருபோதும் விரும்பமாட்டார்கள்.

வணங்கிக் கேட்கிறேன். சவாலை ஏற்றுக்கொண்டு எதிர்க்கட்சியினர் பிரதமர் பதவியை ஏற்றுக்கொள்ள வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து விலகி சுயாதீனமாக இயங்குவதாக செய்திகள் வெளியிடப்பட்டுள்ளன. நான் கூறியக் கருத்தைத் தவறாகப் புரிந்துக்கொண்டுவர்களே அவ்வாறு கூறுகிறார்கள் எனவும் பாராளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்ணான்டோ தெரிவித்தார்.




## மரண அறிவித்தல்



தோற்றம் 01 - 07 - 1957

உதிர்வு 08 - 05 - 2022

### திருமதி மேரி ஜெனோவா ரொபினற (ஜான்சி வவா)

யாழ். குருநகரைப் பிறப்பிடமாகவும், கனடா Toronto வை வசிப்பிடமாகவும் கொண்ட மேரி ஜெனோவா ரொபினற் அவர்கள் 08.05.2022 ஞாயிற்றுக்கிழமை அன்று கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்.

அன்னார், காலஞ்சென்ற குருசுமுத்து வில்வராஜா, பிறிம்ரோஸ் தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற பிலிப்(விறிஸ்), அஞ்சலீனா தம்பதிகளின் அன்பு மருமகளும்,காலஞ்சென்ற ரொபினற் (கிறிஸ்தோ வவா) அவர்களின் ஆசை மனைவியும்,யாழினி(கனடா), ரொபின்(லண்டன்), ரொணி(கனடா), சுஜி(கனடா) ஆகியோரின் ஆசைத் தாயாரும்,காலஞ்சென்ற இராஜக்கோன்(தாய்மாமன்)- பூரணம் ஆகியோரின் அன்பு மருமகளும்,கௌரி(இலங்கை), மாறன்(கனடா), அன்ரன்(கனடா), வரதன்(இலங்கை) ஆகியோரின் பாசமிகு சகோதரியும்,தவேந்திரன்(வவா), அனுஷிகா, லெஸ்லின், நிக்சன்(பீசி) ஆகியோரின் அன்பு மாமியாரும்,அஜய், ஜெனிலியா, செமிரா, யூபிலி, போவாஸ், டேவிற், டானியல் ஆகியோரின் ஆசை பேத்தியும் ஆவார்.

**பார்வைக்கு**
Friday, 13 May 2022 5:00 PM - 9:00 PM
McEachnie Funeral Home 28 Old Kingston Rd, Ajax, ON L1T 2Z7,Canada

**இறுதி ஆராதனை**
Saturday, 14 May 2022 9:00 AM - 12:00 PM
McEachnie Funeral Home 28 Old Kingston Rd, Ajax, ON L1T 2Z7, Canada

**நல்லடக்கம்**
Saturday, 14 May 2022 12:00 PM

Pine Ridge Memorial Gardens (Cemetery Grounds) 1757 Church St N, Ajax, ON L1T 4R3, Canadaஇவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**குடும்பத்தினர்.**

தொடர்புகளுக்கு:
**ரொபின் - மகன்** Mobile : +447940789893
**ரொணி - மகன்** Mobile : +14168578763
**சுஜி - மகள்** Mobile : +16473672064
**மாறன் - சகோதரன்** Mobile : +14168224727
**குட்டி - சகோதரன்** Mobile : +16475461828
**வரதன் - சகோதரன்** Mobile : +94767628848

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 13.05.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**

6.00 மணி : பக்திபாடல்
6.30 மணி : வணக்கம் டான்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய ராசி பலன்கள்
07.05 மணி : உளவியல் கருத்து-உளவள துனையாளர் திரு.நா.நவராஜ்
7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்



7.30 மணி : இன்றைய பத்திரிகைகள்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை- நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : கச்சேரி ஆரம்பம்-மறுஒளிபரப்பு

**பகல்**

12:00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை
01.00மணி : துறைக்கு அப்பால் (மறுஒளிபரப்பு)
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-தீராத விளையாட்டுப்பிள்ளை,சிறுத்தை திரைப்படங்களிலிருந்து காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர்களுக்கான நேரலை நிகழ்ச்சி
5.30 மணி : Short Film
6.00 மணி : ஹொலிவூட் சுப்பர்-10



**இரவு**

7.00 மணி : ரசிகன் எனகின்ற தலைவன்- நகைச்சுவை நிகழ்ச்சி




08.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : அந்தக்காலம் இந்தக்காலம் -செயற்கை உரம் பகுதி-02



10.00 மணி : நேருக்கு நேர்

## DAN COMEDY HD

**காலை**

6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**

1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**

8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**

6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**

12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஒய்வெடு நிலவே

**இரவு**

8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**

5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**

12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**

7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

## ஓம் ரிவி

**காலை**

5.00மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : ஈழத்து சித்தர்கள்
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழககோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

**பகல்**

12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**

7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : திருவிழா-01

## CHANNEL HOLY MARY

**காலை**

7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் (மறுஒலிபரப்பு)
10.00 மணி: அன்னை மரியா
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபங்களும் திருகோணமலை (சனி மறு ஒளிபரப்பு)

**பகல்**

12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை (திருகோணமலை)
03.00 மணி : திருப்பலி யாழ்ப்பாணம் (மறு ஒளிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : ஞானவழி
07.30 மணி : அன்பியம்

## Pirai Television

**காலை**

6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**

12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**

7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு